முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளை
தெரிவு செய்திட

இன்றே நாடுங்கள்

ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
[சி-513]

மக்கங்களின் ஆறு
Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

ஆடவர், வனிதையர்
விரும்பும் அழகு
வண்ணப் புடைவைகளுக்கு

சிறந்த இடம்:

ச. லிங்கநாதன்
வண்ணச்சோலை
13, 14, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-513)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 08 புதன்கிழமை (22 – 03– 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 115

பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு எடுக்கும்

அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 22

சமாதானப் பேச்சுக்கள் முறிவடைவதற்கு அரசாங்கம் அனுமதிக்கமாட்டாது. பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.

இவ்வாறு தெரிவித்தார் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்.

ரூபவாஹினி செய்தியாளருக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:–

சமாதானப் பேச்சுக்கள் முறிந்து விடவில்லை. அவ்வாறு முறிவடைந்து போக நாம் அனுமதிக்கவும் மாட்டோம்.

பேச்சுவார்த்தைகளின் போது சில கஷ்டங்கள் வருவது இயற்கையே.

அரசு-புலிகள் பேச்சுவார்த்தையிலும் சில பிரச்சினைகள் உள்ளன என்பது உண்மையே.

பொருளாதாரத் தடை, மீன் பிடி அனுமதி போன்ற விடயங்கள் சம்பந்தமாக சில பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன.

சிக்கலான பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்த்துவிட முடியாது. அவற்றை மெதுமெதுவாக நம்பிக்கையுடன் அணுக

[6 ஆம் பக்கம் பார்க்க]

இரவு நேர மீன்பிடித்தலுக்கு அனுமதி?

கொழும்பு, மார்ச் 22

இரவு நேர மீன் பிடித்தலை அனுமதிப்பது குறித்து அரசும் பாதுகாப்புப் படையினரும் பரிசீலனை செய்து வருவதாக அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'தஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது. (உ-எ)

4 தமிழ்க் கட்சிகள் கூட்டு: அரசுக்குத் தலையிடியாம்!

கொழும்பு, மார்ச். 22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசை ஆதரித்துவரும் தமிழ்க் கட்சிகளில் நான்கு, ஒரு குழுவாக இயங்க தீர்மானித்திருப்பது அரசுத் தலைமைப்பீடத்துக்கு கவலையைக் கொடுத்திருப்பதாக தெரியவருகிறது.

ஈ.பி.டி.பி., புளொட், இ.தொ.கா. மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியன சேர்ந்தே ஒரு குழுவாக இயங்க முடிவு செய்துள்ளன.

இக்குழுவில் மலையக மக்கள் முன்னணி சேர்ந்திருப்பது அரசுக்கு கூடிய கவலையைக் கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இ. தொ. கா. தலைவர் தொண்டமானை இத்தமிழ்க் குழு ஆலோசகராக ஏற்றுள்ளது. மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரனும் இக் குழு எடுக்கும் முடிவுகளுக்குக் கட்டுப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

சந்திரசேகரன் - தொண்டா அடிக்கடி சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 22

மலையக அரசியலில் இரு துருவங்களாக வர்ணிக்கப்பட்டுவரும் இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான தொண்டமானும் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பிரதி அமைச்சருமான பெ. சந்திரசேகரனும் அடிக்கடி சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு தமிழ்க் கட்சிகள் சேர்ந்த குழுவின் கூட்டம் தொண்டமான் தலைமையில் ஒழுங்காக நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

யாழ். வர காத்திருக்கும் இரு அமைச்சர்கள்!

கொழும்பு, மார்ச் 22

யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகள் தலைவருடன் பேச்சு நடத்த விரும்பும் அரசாங்கத்தின் இரு அமைச்சர்கள் புலிகளின் பதிலுக்காகக் காத்திருக்கிறார்களாம்!

வடக்கு புனரமைப்புக்கு பொறுப்பான விசேட ஜனாதிபதி செயலணிக் குழுவின் தலைவரான பொதுநிர்வாக, மாகாண சபைகள், பெருந்தோட்ட நாடாளுமன்ற விவகார அமைச்சரான ரட்னசிறி விக்கிரமநாயக்கா, கூட்டுறவு

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்ட அபிவிருத்தி: கொழும்புக் கூட்டம் திடீரென ஒத்திவைப்பு

செயலக அதிகாரிகள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வரவு-செலவுத்திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில் இருந்து யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளவிருக்கும் அபிவித்தித்திட்டங்களை இனம் காண கொழும்பில் நடைபெறவிருந்த கூட்டம் இறுதி நேரத்தில் திடீரென ஒத்திவைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக கொழும்பு சென்றிருந்த யாழ். செயலகத்தைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகளுக்கும், தீவுப்பகுதி மேலதிக அரச அதிபருக்கும் இந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது பெரும் ஏமாற்றத்தை அளித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இந்தக் கூட்டம் கடந்த 19 ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது.

கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை. (ஓ-3)

மக்களின் பிரச்சினை தீராவிடில் மீண்டும் மோதல் நிலை உருவாகும்

சண்டே லீடருக்கு அன்ரன் பாலசிங்கம் பேட்டி

கொழும்பு, மார்ச். 22

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காது அரசு விடுதலைப்புலிகளை புறக்கணிப்பின் மீண்டும் மோதல்கள் நிச்சயமாக ஏற்படும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முன் கண்டவாறு தெரிவித்தார்.

சண்டே லீடரின் செய்தியாளர் பிரெட்ரிக்கா ஜான்ஸுக்கு அளித்தபேட்டியில் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது:–

''சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சாத்தியமான அனைத்தையும் உறுதிப்படுத்துவதில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் மீண்டும் மோதல் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

மீண்டும் மோதல் ஏற்படுவது இரு தேசங்களுக்குமே பேரழிவாக முடியும்.

பாதிக்கப்பட்ட மக்களின் உடனடிப் பிரச்சினைகளை அவசரமாக தீர்த்து வைப்பதற்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும். அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தாமதம் ஏற்படின், பலவீனமாக உள்ள மோதல் தவிர்ப்பு நிலை காரணமாக, மீண்டும் பிரச்சினை ஏற்படும்.

மீண்டும் யுத்தம் வெடித்தால் சமாதானம் வெகு

(6 ஆம் பக்கம் பார்க்க)

சகல சமூகங்களினதும் தனித்துவம் பாதுகாக்கும் விதத்தில் அதிகார பரவல்

கருத்தரங்கில் சந்திரிகா தகவல்

கொழும்பு, மார்ச் 23

இந்நாட்டில் வாழும் சிங்கள தமிழ், முஸ்லிம், பறங்கிய சமூகத்தினரின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கேற்ற முறையில் அரசியல், சமூக, கலாசார சட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடியதான நிர்வாகப் பரவலாக்கம் அவசியம்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற ''இன முரண்பாடும் அரச கரும மொழிச் சட்டமும்'' என்ற கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விரும்பியோ விரும்பாமலோ வேண்டுமென்றோ, அக்கறையின்மையாலோ தமிழ் மொழி அமுல் சட்டம் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதன் விளைவாக தமிழ் மக்கள் தமது தனித்துவத்தைப் பேணி சுயமரியாதையுடன் வாழ முடியவில்லை.

இந்தக் குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். எல்லா இன மக்களும் கௌரவமாகவும், தனித்துவத்தைப் பேணி வாழவும் நிர்வாகத்தில் அதிகரப்பரவல் வழிசெய்யும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தனிநாட்டுக்குப் பதிலாக அதிகாரப்பரவலாக்கலை ஏற்றுக்கொள்ள தயார் என்று கடந்த பல மாதங்களாக தெளிவாகத் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி சந்திரிகா வெள்ளியன்று இந்தியாவுக்கு 4 நாள் விஜயம்

தொடர்ந்து பங்களாதேஷுக்கும் செல்கிறார்

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 4 நாள்கள் அரசமுறைப் பயணமாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்தியா செல்கிறார்.

ஜனாதிபதியுடன் அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், கிங்ஸ்லி விக்கிரமரத்தினா ஆகியோரும் செயலாளர் கே.பாலபட்டபென்டியும் மற்றும் பல சிரேஷ்ட அதிகாரிகளும் செல்வர்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி புதுடில்லியில் இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர்தயாள் சர்மா, பிரதமர் பி. வி. நரசிம்மராவ், வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, நிதி அமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங் வர்த்தக துறை அமைச்சர் திரு. பா. சிதம்பரம் ஆகியோரை சந்தித்துப் பேசுவார்.

இரு நாடுகளுக்கும் இடையே பொருளாதார உறவுகளை விரிவுபடுத்துவது பற்றியும் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் சார்க் மாநாடு குறித்தும் அவர் இந்திய தலைவர்களுடன் பேச்சுநடத்துவார்

இனப்பிரச்சினையில் இந்திய நிலைப்பாடு குறித்து பிரதமர் நரசிம்மராவுடன் விரிவாகப் பேசுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி இந்தியாவில் 28 ஆம் திகதி வரை தங்கிவிட்டு 2 நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பங்களாதேஷ் செல்வார்.

அவர் இங்கிருந்து புறப்படும்போதும் திரும்பும்போதும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் எந்தவித உத்தியோகபூர்வ வைபவமும் நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-3)

புலிகளின் கோரிக்கைகள் சாதாரணமானவையே

நாடாளுமன்றத்தில் தமிழ் எம். பி.

கொழும்பு, மார்ச் 22

விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து 4 சாதாரண கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டுள்ளன. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எவ்வித முட்டுக்கட்டையும் இன்றி அதனைத் தொடர்ந்து அரசு முன் எடுக்க வேண்டும் என்று மட்டு. மாவட்ட எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுவிட்டது போல பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்துள்ளன.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் இப்பிரச்சினை தீர்க்கப்படும் என தமிழ் மக்கள் மட்டுமல்ல பெரும்பான்மை சமூக மக்களும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் — என்றும் அவர் கூறினார். (ஓ-3)

முச்சந்தி முரளி



ஏற்கனவே இருக்கிற குழப்பம் இந்தியா போனால் இன்னும் கூடுமோ தெரியாது.....!

இன்று இயங்கமாட்டா

யாழ்ப்பாணம், மார்ச் 22

கோண்டாவிலில் உள்ள தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும், 95 ஆம் ஆண்டு வரி அட்டை வழங்குவதற்கென விசேடமாக இயங்கும் செயலகங்களும் தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்று திறக்கப்படமாட்டா என்று போக்குவரத்துக்கண்காணிப்புபிரிவின் [illegible] பகுதியினர் அறிவித்திருக்கின்றனர். [ஓ]

கைதிகளாக இருக்கும் ராணுவத்தினர் சர்வதேச நடைமுறையில் கவனிப்பு

பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தமிழ்ச்செல்வன்

லண்டன், மார்ச் 23

''எம்மால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் சர்வதேச நடைமுறையின்படி கவனிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு பார்வையிட்டு வருகிறது.''

— விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பி.பி.ஸிக்கு இவ்வாறு தெரிவித்தார்.

''அவர்களை விடுதலை செய்யும் நோக்கம் உண்டா?' எனக் கேட்டபோது தமிழ்ச்செல்வன் கூறியதாவது;

எங்களின் பல போராளிகள் பல கட்டங்களில் — விபத்துக்களில் — கைது செய்யப்பட்டுள்ளனர். பெரும் எண்ணிக்கையான எமது மக்கள் கைது செய்யப்பட்டு கொடூரமான சித்திரவதைக்கு மத்தியில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

எம்மிடம் உள்ள யுத்தக் கைதிகள் எமது மக்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட — ஆயுதம் ஏந்திய — படையினர் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டால் அவர்களை விடுதலை செய்வோமா என்பது பற்றி இப்போது கருத்து கூறமுடியாது — என்றார்.

அவர் மேலும் கூறியதாவது

கடந்த 4 மாதங்களாக அரசுடன் பேசி வருகிறோம். நாம் பேசும் விடயங்கள், கூறும் கருத்துக்கள் ஆகியவற்றை அரசு கருத்தில் எடுக்காது — தன்னிச்சையாக —எமது மக்களின் மனநிலையைப் புறக்கணித்து —செயற்பட்டு வருகின்றது.

எமது மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்த்து, ஏனைய பகுதி மக்கள் அனுபவிக்கும் வாழ்க்கை நிலை அவர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கான விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான ஒரு நிகழ்ச்சி நிரலை அரசு தான் முதலில் முன்வைத்தது; அதுகுறித்து பேச அரசு பிரதிநிதிகளை அனுப்பியது. நாமும் எமது பிரதிநிதிகலை

[6.ஆம் பக்கம் பார்க்க]

யாழ். நிலை குறித்து ஆயர் கென்னத் சந்திரிகாவுக்கு நேரில் விளக்கினார்

யாழ்ப்பாணம் சென்று திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோவும், கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜெயதேவ உயங்கொடவும் நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து யாழ்ப்பாண நிலைமைகளையும், தமிழ் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சின் விவரங்களையும் எடுத்துச் கூறினர்.

ஜனாதிபதியுடனான இச்சந்திப்பின் போது நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், ஜனாதிபதியின் செயலாளர் குசும்சிறி பாலபட்டபென்டி ஆகியோரும் உடன் இருந்தனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் காலக்கெடு ஒன்றை விதித்துள்ள போதிலும், அதனால் பேச்சுவார்த்தை முயற்சி முறிவடைந்து விடவில்லை என்று அமைச்சர் பீரிஸ் இச்சந்திப்பின் பின்னர் தெரிவித்தார்.

''சமாதான முயற்சிகள் நிலை குலையவில்லை; பேச்சுக்களும் முறிவடையவில்லை, — என்றார் அவர்.

ஆயர் கென்னத் பெர்னாண்டோவும், ஜெயதேவ உயங்கொடவும் ஜனாதிபதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஐந்து நாட்கள் வளர்ச்சியடைந்த லோமன் பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி, (Bar முன்பாக), யாழ்ப்பாணம். [35826]

தேவை

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு அண்மித்ததாக 3 மைல் சுற்றாடலில் யாழ் நகரில் தாயும் மகனும் வசிப்பதற்கு வசதியான வீடு தனியாகவோ அன்றி பகுதியாகவோ தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 82, மே/பா 43 உதயன் சேவை நிலையம், கே. கே. எஸ். றோட், சுன்னாகம். [8293]

தவறிவிட்டது

காசிலிங்கம் வைத்தீஸ்வரன் ஆகிய எனது வங்கி அறிமுக அட்டை 20-2-95 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட 769 வழி இலக்க மினிபஸ்ஸில் யாழ்ப்பாணத்திற்கும் தாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வைத்தீஸ்வரன், இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது சோமசுந்தரம் வீதி, தாவடி மேற்கு, கொக்குவில் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [35824]

மாட்டெரு விற்பனைக்கு

மாட்டு எரு விற்பனைக்கு உள்ளது. ''மில்க்வைற்'' [சி 819]

மகாதேவா ஜோதிடர்

குறிப்பு எழுதுதல், கை, மனை பார்த்தல் ஆகியவற்றிற்கு ஜோதிடரை இல 140, செல்லர் வீதி, கல்வியங்காட்டுச் சந்தைக்கு அருகாமையில் எனும் முகவரியில் தினசரி சந்திக்கலாம். [35800]

றோணியோ பிரதி

தேவையான முறையில் குறித்த தவணையில் றோணியோ செய்து கொடுக்கப்படுகிறது. 100 பிரதி இரண்டு பக்கமும் 30/- மட்டுமே. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி [வெலிங்டன் சந்திக்கருகில்] யாழ்ப்பாணம். [சி-628]

எமது சேவை

தட்டச்சு றோணியோ இலத்திரனியல், இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் திருத்துதல், தட்டச்சு றோணியோ பிரதி செய்தல் ஆகியனவற்றிற்கு O.E.T.C. இல. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [மனோகரா சந்திக்கு அருகில்] [8391]

வாங்கிவிட்டீர்களா?

காட்சிக்கும் பலனுக்கும் சரிவரும் திருக்கணித பஞ்சாங்கம் எதிர்வரும் புதுவருட பிரதி விற்பனையாகிறது. ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே பெற்றுக் கொள்ளுங்கள். எல்லா புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். திருக்கணித நிலையம், மட்டுவில். [35759]

காயத்திரி வெளியீடுகள்

ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 க்கான வே. நவமோகனின் இலகு தமிழ் இலக்கணம் (திருத்திய பதிப்பு) ரூபா 25/- மாற்றம் - முத்திங்கள் சஞ்சிகை ரூபா 15/- எல்லாப் புத்தகசாலையிலும் கிடைக்கும். [35783]

புலமைப்பரிசில்

மேற்படி பரீட்சைக்கான பொது அறிவு, மொழித்திறன் வெளிவந்து விட்டது. 60/- மட்டுமே. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்தி, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-619)

வீனஸ் அன்ரனா

T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T. V. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிஷ்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-396]

சுகமஞ்சரி சஞ்சிகை

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக சமூக மருத்துவத்துறையினர் ''சுகமஞ்சரி'' என்ற காலாண்டு சஞ்சிகை ஒன்றை வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

சமூக சுகாதார சேவையில் ஈடுபடுவோர், பணிபுரிவோருக்கு அறிவூட்டும் நோக்குடன் இச் சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

சுகமஞ்சரியின் முதலாவது இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. தமிழ் பேசும் சுகாதார ஊழியர்களுக்கு மட்டுமன்றி ஏனையோருக்கும் பயனுள்ள பல கட்டுரைகள் இவ்விதழில் வெளியாகி உள்ளன. (அ)

நியாயவிலையில் மூல பொருள்கள்

கைத்தொழில்களுக்கான மூலப்பொருள்களைக் கப்பல் மூலம் கொண்டு வந்து அவற்றை நியாயவிலையில் வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ். அரசாங்க அதிபரின் ஒத்துழைப்புடன் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

எனவே தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் தம்மைப் பதிவு செய்து கொண்ட கைத்தொழில் நிறுவனங்களும், புதிதாகத் தம்மைப் பதிவு செய்ய விரும்பும் கைத்தொழில் நிறுவனங்களும் உடனடியாகத் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தின் செய்திக் குறிப்பான்று தெரிவிக்கின்றது. (இ-5

விற்பனையாகிறது!

அறிவுக் களஞ்சியம் - 30

(சி-626)

ஓம் சக்தி

ஆசார்யாபிஷேக அழைப்பு

(குருப்பட்டம் வழங்கல்)

பிரம்மஸ்ரீ. ச. ஸ்ரீசந்தனசர்மா (ஜெயா)
அவர்களுக்கு

இடம்: கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் தேவஸ்தானம்

காலம்: பங்குனி 9 ஆம் நாள் நாளை (23 - 03 - 95)
வியாழக்கிழமை காலை 9-30 — 11 மணி

தீட்சாகுரு: பிரம்மஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் அவர்கள்
(மட்டுவில்)

தங்கள் நல்வரவை நாடும்;
பிரம்மஸ்ரீ ந. சபாரத்தினக்குருக்கள்
குடும்பத்தினர்

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(35805)

அறிவித்தல்

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

25-02-95, 26-02-95ஆம் திகதிகளில் நடைபெறவிருந்து பின்னர் இரத்துச் செய்யப்பட்ட பின்வரும் பிரதேச மன்றங்களின் பொதுக்கூட்டங்கள் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறவுள்ளன என்பதை சம்பந்தப்பட்ட அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம். ஒவ்வொரு அங்கத்தவருக்கும் தனித்தனி கூட்ட அறிவித்தல்கள் நிகழ்ச்சி நிரலுடன் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. தபால் மூல அறிவித்தல் கிடைக்காதவர்கள் இவ்வறிவித்தலை ஏற்று கூட்டத்திற்கு தவறாது சமூகம் கொடுக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிரதேச மன்றம்	கூட்டத்திகதி	நேரம்	இடம்
01. நல்லூர்	25-03-95	மு. ப. 10-00மணி	யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபம்
02. வலிகாமம் கிழக்கு (கோப்பாய்)	26-03-95	மு. ப. 9-30மணி	யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபம்
03. வலிகாமம் தெற்கு (உடுவில்)	26-03-95	மு. ப. 9-30மணி	யாழ் / இணுவில் மத்திய கல்லூரி மண்டபம், இணுவில்.

இ. பொன்னம்பலவாணர்,
கௌரவ செயலாளர்.

[சி-820]

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 12 — 10 — 1935

உதிர்வு: 01 — 04 — 1994

அமரர் மு. இராசரத்தினம்

திதி: 22 — 03 — 1995

ஓராண்டு சென்றாலும் எம் உள்ளத்தில்
வீற்றிருக்கும் அன்புத்தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''சாந்தினிவாசா''
சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.

(35812)

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 06 — 06 — 1913

மறைவு: 01 — 04 — 1994

பண்டிதர்
கணபதிப்பிள்ளை சிவசம்பு

எமது அன்புத் தெய்வமே!

உம்மை உருக்கி எம்மை ஆளாக்கி
அன்பால், அறிவால், பண்பால், பாசத்தால் -
எம்மை வழிகாட்டி
பாரினில் நாம் வாழ பார்த்திருப்பீர் என்றிருந்தோம்
பாதியினிலே நேசமுடன் ஒரு வார்த்தையும்
கூறாமல் மௌனமாய் மறைந்த மாயமென்ன?
ஆண்டொன்று சென்றாலும் ஆறிடுமோ நம் துயரம்

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

[35817]

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 08 — 1930

மறைவு: 31 — 03 — 1994

திருமதி சரஸ்வதி காசிப்பிள்ளை

ஆண்டு திதி: 22 – 03 – 1995

எங்கள் குல விளக்கே! தூய அன்னையே! அன்புடனும், பாசத்துடனும், இடையீடில்லாத இறை நினைவோடும் வாழ்ந்து வழிகாட்டிய அன்புக்கினியவரே!

உங்கள் தோற்றம் எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று மறைந்து விட்டது.

எங்கள் நினைவிலும், கனவிலும் எங்களுடன் கூடவே அகலாது இருக்கிறீர்கள். நாளும் பொழுதும் நல்ல மலர்களோடு, ஆலயங்கள் தோறும் சென்று எங்கள் நல்வாழ்விற்காக பிரார்த்தனை செய்தீர்கள். உங்கள் ஆழமான, ஈடுபாடான வழிபாடு, விரைவிலே உங்களை இறைவனுக்குப் பிரியமுள்ள மலராக அழைத்துக் கொண்டதே ஈஸ்வர நினைவு — சாயிஸ்வர பதம் — உங்கள் ஆத்மா அடைய என்றும் பிரார்த்திப்போம்.

என்றும் பிரார்த்திக்கும்;

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்.

[illegible]
கொக்குவில் [illegible]

[8393]

வலிகாமம் மேற்கு பிரதேச
கலாசார பேரவையினரின்

மாபெரும் இசைவிழா

மகாகணபதி பிள்ளையார்
கோயில் வீதி
சித்தன்கேணி.

4 ஆம் நாள் 22 - 03 - 1995
புதன்கிழமை

வட்டு. கிழக்கு, வட்டு. வடக்கு, வட்டு தெற்கு
வட்டு. தென்மேற்கு, வட்டு மேற்கு, சங்கரத்தை
ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின்
ஆதரவில்

மாலை

5-00 — 6-00 மங்கள இசை
திரு. சு. தில்லைநாதன் குழுவினர்
(சித்தன்கேணி)

6 00 — 7-00 வயலின் சோலோ
திரு. வி. ஆர்.
இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. எஸ். கோபிதாஸ் — வயலின்
திரு. க. கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. ச. வேல்மாறன் — கடம்
திரு. எஸ். இராசு — மோர்சின்

7-00 — 7-45 பாட்டு
இசைக்கலைமணி
திருமதி நித்தியகல்யாணி ஜெயக்குமார்
(ஆசிரியை அராலி வள்ளியம்மை
வித்தியாலயம்)
செல்வி அ. சந்தானலட்சுமி — வயலின்
திருமதி கானகோகிலம் ஜெயம் — மிருதங்கம்

7-45 — 8-00 மங்கல விளக்கேற்றல்
திரு. அ. அரியரத்தினம்
(முன்னாள் விரிவுரையாளர், தலைவர் வலி
மேற்கு பிரதேச செயலக கி.மு.ச. சமாசம்)
டாக்டர் திரு. த. சிங்கஅரியரத்தினம்

★ வரவேற்புரை
திரு. க. ஸ்ரீகரன்
(கிராம உத்தியோகத்தர் வட்டுக் கிழக்கு)

★ தலைவர்
திரு. கா. சந்திரராசா அவர்கள்
(பிரதேச செயலாளர், மேலதிக அரசாங்க
அதிபர்)

★ முதன்மை விருந்தினர்
சமூகமணி திரு. வே. தம்பையா
(ஓய்வுபெற்ற அதிபர், போஷகர் கலைநகர்
கி. மு. சங்கம்)

★ சிறப்பு விருந்தினர்
திரு. ந. சண்முகம்
(ஓய்வுபெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர்)
திரு. பொ. சிவசுப்பிரமணியம்
(தலைவர், சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபை)

★ நன்றியுரை
திரு. க. விஜயவேல்
(கிராம உத்தியோகத்தர் சங்கரத்தை)

8-00 — 8-45 பாட்டு
இசைக்கலைமணி
திருமதி அன்பரசி கதிர்காமநாதன்
(ஆசிரியை, காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி)
செல்வி அ. சந்தானலட்சுமி — வயலின்
திருமதி கானகோகிலம் ஜெயம் — மிருதங்கம்

8-45 — 9-45 பாட்டு
சங்கீத பூஷணம் திரு. வி. கே. நடராசா
பிரம்மஸ்ரீ
பி. வெங்கடேஸ்வர சர்மா — வயலின்
பிரம்மஸ்ரீ
எஸ். பாலச்சந்திர சர்மா — மிருதங்கம்

9-45 — 10-30 நடன நிகழ்ச்சிகள்
நடன வித்தகி
திருமதி ராகினி முரளிதரன் — நட்டுவாங்கம்
சங்கீத ரத்தினம்
திருமதி விஜலட்சுமி இராசநாயகம்
(தொலைக்கல்வி போதனாசிரியை,
ஆசிரியை வட்டு. இந்துக்கல்லூரி) — பாட்டு
இசைக் கலைமணி
அன்பரசி கதிர்காமநாதன் — பாட்டு
(ஆசிரியை, யாழ்ற்றன் கல்லூரி காரைநகர்)
திருமதி
குகப்பிரியா கிருஷ்ணமூர்த்தி — பாட்டு
செல்வி அ. சந்தானலட்சுமி — வயலின்
திருமதி கானகோகிலம் ஜெயம் — மிருதங்கம்

குழு நடனம்
பங்குபற்றும் மாணவிகள்
செல்விகள்: உ. சங்கீதா, எஸ். சர்மினி
எஸ். தர்மினி, எஸ். டயர்உஷா,
எஸ். டலெக்சி, எஸ். ஜெனா

மயில் நடனம்
செல்வி கா. நிசேவிதா

நாட்டிய நாடகம்
''சீதா பாராயணம்''
பங்குபற்றுவோர்:
செல்விகள்: கு. திருபா, எஸ். சுதர்சினி,
எஸ். சிவஜா, எஸ். சுஜித்தா,
எஸ். நிரோஜினி, எஸ். சுகன்யா, எஸ். ஜசோ
ந. தர்சினி, எஸ். சுனித்தா

● இசைப் பிரியர்களையும், அன்பர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– கலாசாரப் பேரவையினர்.

வாழ்த்துவோர்:
திரு. எஸ். நந்தகோபால்
★ ரூபி நகைப் பூங்கா ★
சந்தோசம் தெரு (கஸ்தூரியார் வீதி),
யாழ்ப்பாணம்.

[சி-798]

சிங்கள மக்களின் உரிமைகளை அரசமைப்பு மாற்றம் பாதிக்கக் கூடாது

அஸ்கிரிய பீடாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 22

'சிங்கள இனத்துக்கும், பௌத்த சாசனத்துக்கும் இதுகாலவரை இருந்துவந்த உரிமைகளை செயலற்றதாக்கும் தற்போதைய நடவடிக்கைகளைக் கைவிடவேண்டும்; இன்றேல் சிங்கள மக்களின் எதிர்ப்பு உருவாகும்.

இவ்வாறு அஸ்கிரிய பௌத்த பீடாதிபதி வண. பலிப்பான ஸ்ரீ சந்தானந்த தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரசமைப்பு திருத்தச் சட்டம் தொடர்பாக, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமானது, இந்த நாட்டில் 2 ஆயிரத்து 500 ஆண்டுகளாக தொடர்ந்து வாழ்ந்து வரும் சிங்கள இனத்திற்கும், பௌத்த சாசனத்திற்கும் இருந்துவந்த உரிமைகள் அனைத்தையும் முழுமையாகவே பேணிவந்தது.

ஆனால் தற்போது அதனைச் செயலற்றது ஆக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகைய திட்டங்களைக் கைவிடவேண்டும். இல்லையேல் சிங்கள மக்களின் எதிர்ப்பு உருவாகும்.

1815 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கண்டிய உடன்படிக்கையின் போது சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கப்பட்ட உறுதிகள் 1818, 1821 ஆம் ஆண்டுகளில் மேலும் வலுப்பெற்றன. அவை தொடர்ந்தும் இந்நாட்டு இதிகாசங்களிலும் இருந்து வருகின்றன.

தொடர்ந்து 1972, 1978 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற அரசமைப்புக்களில் இந்த உறுதியும், பாதுகாப்பும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

2,500 ஆண்டுகளாக இந்த நாட்டில் நிலைபெற்று வந்துள்ள சிங்கள இனத்தினதும், பௌத்த மதத்தினதும் உரிமைகள் – எதிர்காலத்தில் பாதுகாக்கப்படாமல் போகலாம் என்ற அச்சம் தற்போது உருவாகி வருகிறது.

இந்த நிலையில சிங்களவரையும், இந்தியாவிலிருந்து இங்கு வந்தவர்களையும் சமநிலைக்குக் கொண்டுவரும் முயற்சியாகவே தற்போதைய நடவடிக்கைகளை கருத வேண்டி உள்ளது.

இப்படி அவர் தெரிவித்துள்ளார். [இ-5]

வடக்கு - கிழக்கு மாகாண

கூட்டுறவுச் சபைகளின் மாநாடு திருமலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வடக்கு – கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த கூட்டுறவுச் சபைகளின் தலைவர்கள், செயலாளர்களின் மாநாடு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை திருகோணமலையிலுள்ள வடக்கு – கிழக்கு மாகாண கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சு. டிவகலாலாவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம் மாநாட்டில் வடக்கு கிழக்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் ஆராயப்பட இருக்கின்றன. அங்கு சில முக்கிய தீர்மானங்களும் எடுக்கப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

இம் மாநாட்டில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. வை. செந்திநாதன், செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரும் பங்குபற்றுகின்றனர். [ஒ-4]

விளையாட்டு நிகழ்வுகள்

அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3-30 மணி: கிறீன்பீல்ட் அணி எதிர் சென் நீக்கலஸ் அணி.

★ 4-30 மணி: கொய்யாத்தோட்ட அணி எதிர் சென். அன்ரனீஸ் 'ஏ' அணி.

(உ)

பத்திரிகை ஆசிரியர் மீது வழக்கு

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதி சந்திரிகாவை அவதூறுசெய்ததாக ''சண்டே ரைம்ஸ்'' ஆசிரியர் சிங்ஹரட்னதுங்க குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இவருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தார்.

(உ-எ)

போசாக்கு பராமரிப்பு பூங்கா திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

கடற்புலி கப்டன் வாமன் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா, தொண்டமனாறு, செருடாவிலில் இன்று புதன் கிழமை மாலை 4 30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வினை விடுதலைப் புலிகளின் கடற்புலிகள், அரசியல் துறையினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

சிறப்புரைகள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(இ-5)

சுகாதார ஊழியருக்கு முற்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

புதுவருட பண்டிகையை முன்னிட்டு யாழ் சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு 1,500ரூபா சம்பளமுற்பணம் வழங்கப்படவுள்ளது.

இதனை பெற விரும்பும் ஊழியர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் யாழ் சுகாதார சேவை— மாகாணபிரதிப் பணிப்பாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-14-135]

கட்டுக்கோப்பின்றி இயங்கும் குறை இந்துமதத்தில் காணப்படுகிறது

இந்து தர்மம் வெளியீட்டு விழாவில் சுவாமிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

எல்லா மதங்களும் கட்டுக்கோப்போடு இயங்குகின்றபோது, இந்துமதம் மட்டும் கட்டுக்கோப்பில்லாது இயங்கும் குறை காணப்பட்டு வருகிறது. இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஆத்மீகத் தலைவர்களாலும், பேரறிஞர்களாலும், இந்து அபிமானிகளாலும், இந்து ஸ்தாபனங்களாலும் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்ட அமைப்பே இந்து சமயப் பேரவையாகும்.

இன்று இப் பேரவையை என்ன நோக்கத்திற்காக நிறுவினோமோ, அந்த நோக்கத்தை நிறைவு செய்கிற வகையில் செயற்படுவது பாராட்டுக்குரியது

இந்து சமயப் பேரவையின் இந்து தர்மம் மலர் வெளியீட்டு விழாவில் நல்லை ஆதீன பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி விழா சுன்னாகம் ஐயனார் கோயில் மண்டபத்தில் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா தலைமையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் இந்து சமயப் பேரவையின் செயலாளர் திரு. சி. சக்திகிரிவன் உரையாற்றும் போது கூறியதாவது:

முன்னைய காலத்தில் ஆலயங்கள் எவ்விதம் அறச்சாலைகளாக மிளிர்ந்தனவோ அதே நிலைக்கு மீண்டும் புதுப்பொலிவு பெறவேண்டும் என்ற நோக்கை முதன்மையாகக் கொண்டே இந்து தர்மம் சஞ்சிகை எம்மால் வெளியிடப்படுகிறது. ஆத்மீக உணர்வோடு கலை வளர்க்கும் ஆலயங்கள் தர்மம் பேணும் கேந்திர நிலையங்களாக திகழவேண்டும்.

ஆலயங்கள் பக்தி உணர்வை வளர்ப்பதோடு பண்பாட்டைப் பேணும் பல்கலைக் கழகங்களாகத் திகழ்கின்றன எமது கலைகலாச்சாரம் எல்லா இடங்களிலும் காலச் சூழ்நிலையால் மாறுபட்டாலும் ஆலயங்களில் இம் மாற்றம் ஏற்படாதிருக்கிறது. இது பண்பாட்டிற்கும், கலைகாலாச்சாரத்திற்கும் கிடைத்த பெரு வெற்றி ஆகும். இத்தகைய தனித்துவம் பெற்ற இந்து ஆலயங்கள் முன்னைய காலம் போல் ஆத்மீக உணர்வை வளர்ப்பதோடு அறப்பணிகளையும் மேம்படுத்த வேண்டும்.

ஆலயங்களைச் சூழ உள்ள பகுதிகளில் ஆதரவற்றோர் இல்லங்களும், கல்விக் கூடங்களும், வைத்தியசாலைகளும், தொழிற்கூடங்களும் நிறுவப்பட வேண்டும் இன்றைய தொழில் நுட்ப யுகத்தால் இதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அனைத்து இந்துக்களையும் சார்ந்ததாகும். இந்த உணர்வை இந்துக்களிடையே வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கிலே தான் எமது பேரவையால் மாதா மாதம் ''இந்து தர்மம்'' எனும் மாதாந்த சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகிறது என்றார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ். மாநகர ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம் மனிதனில் சிறிய நானும், பெரிய நானும் இருக்கின்றது இதல் சிறிய நான் உயர்ந்த உணர்வுகளை வளர்ப்பதில்லை பெரிய நான் செயற்படுகிற போது நற்பணிகளையும், நற்செயல்களையும் வளர்ப்பதோடு ஆத்மீக மேம்பாட்டையும் எம்மிடையே வளர்க்கிறது. இதனைத் தூண்டுவதற்கு இந்து தர்மம் போன்ற பல சஞ்சிகைகள் அவசியமானது— என்றார்.

விழாவில் இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் அறிமுகவுரை நிகழ்த்தினார். மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து ஷண்முகநாதக் குருக்களும், சிவானந்த குருகுல பரிபாலனசபைச் செயலாளர் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்களும் ஆசியுரை வழங்கினர்.

சஞ்சிகை முதற்பிரதிகளை திரு. சி. குமாரவேல், திரு. சோ. அருணகிரிநாதன். திரு. பெ. வாமதேவன், திரு. கு. பாலசிங்கம், டாக்டர் சிவபாதம் ஆகியோர் பெற்றனர். (ஒ)

உற்பத்தி ஊக்குவிப்பு போட்டிகள்

அராலிமேற்கு ராஜன் கதிர்காமர் பொதுப்பணி விளையாட்டுக் கழகம்— புதுவருடத் தினத்தன்று, உற்பத்தி ஊக்குவிப்புப் போட்டிகள் பலவற்றை நடத்தவுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள வழங்கப்படவுள்ளன. [இ-5-16]

அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்த பின்னரே அரசியல் தீர்வு குறித்து ஆராய வேண்டும்

ஆறுமுகம் யோகராஜா
பேராதனைப் பல்கலைக்கழகம்

பொது ஜனஐக்கிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதிகளிலொன்று புதிய அரசமைப்பின் உருவாக்கமாகும். இதன்படி புதிய அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டிய அபிப்பிராயங்கள் பற்றி பல மட்டங்களிலுமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டு நகல் திட்டமொன்று வெளியாகியுள்ளது. எனினும் இந்த நகல் திட்டமானது சரியான முறையில் மக்களை வந்தடையவில்லை என்ற குறைப்பாடு பல தரப்பிலிருந்தும் வெளிவந்த வண்ணமுள்ளன.

புதிய அரசமைப்பின் முழுமையான வடிவம் எதிர்வரும் ஜூலை 11க்கு முன்னர் வரைந்தளிக்கப்படுமென ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார். அத்துடன் வரையப்படும் புதிய அரசமைப்பில் இப்போது நடைபெறும் பேச்சுவார்த்தையின் தீர்வுகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதிலும் முன்னணி தமது கவனத்தைச் செலுத்தியுள்ளது. எனினும் இன்றைய குறுகிய காலத்தில் இது சாத்தியமானதா? என்ற வினா எழுந்து கொண்டிருக்கின்றது.

அரசமைப்பில் இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் சேர்க்கப்பட்டு அது சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் தமிழ் பேசும் மக்களுக்கு உடன்பாடு காணப்படுகின்ற போதிலும் அது இன்றைய குறுகிய காலத்தில் எந்தளவு சாத்தியமானதாகலாம்?

பல்வேறுபட்ட முரண்பட்ட சக்திகளுக்கிடையே உடன்பாடு காணப்பட வேண்டியதும் சிக்கல் நிறைந்ததுமான இன்றைய இனப்பிரச்சினையை இன்னும் இருக்கும் சுமார் நான்கு மாத காலத்துள் [புதிய அரசமைப்பு ஜூலை 11] அரசாங்கத்திற்கு தீர்த்து வைக்கக் கூடிய இயலுமை உள்ளதா? என்பதும் இன்று கவனிப்புக்குரிய விடயமாகவே உள்ளது.

பூநகரி தடைக்கல்

அரசு – புலிகள் பேச்சுவார்த்தையில் பூநகரி முகாம் சம்பந்தமாக இடப்பட்ட தடைக்கல் இன்னும் இழுபறி நிலையிலிருக்கும் போது தொடர்ந்தும் சமாதான முயற்சிகள் எந்தவித கண்டங்களுமின்றி சுகப்பிரசவம் எடுக்கும் என்பதில் எவரும் உத்தரவாதமளிக்க முடியாத நிலையே இன்றுள்ள அரசியல் நிகழ்வாகும். இரு தரப்பிலுமிருந்து வெளிவரும் அவநம்பிக்கைகளும், சந்தேகங்களும் பேச்சுவார்த்தையின் போககு எவ்விதம் அமையப்போகின்றதென்பதை அனுமானிக்க முடியாத நிலையொன்றினையே தோற்றுவித்துள்ளது.

இரு தரப்பினரும் நம்பிக்கை தரும் வகையில் தமது காய் நகர்த்தலிலீடுபடுவதே அமைதி காண்பதற்கான ஒரேயொரு மார்க்கமாக தென்படுகின்றது.

நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் ஆக்கபூர்வமான வகையிலமைந்து சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிரந்தரத் தீர்வு கிட்டுமானால் அது புதிய அரசமைப்பிலும் வெளிப்பட வேண்டும்.

ஆனால் தற்போதைய நிலையில் புதிய அரசமைப்பின் பிரசவத்தின் போதே (ஜூலை 11இற்கு முன்) தீர்வு முயற்சிகள் உள் இழுக்கப்பட வேண்டுமென முன்னணி கனவு காண்பது அர்த்தமற்ற விடயமாகவே கருத வேண்டியுள்ளது.

ஏனெனில் இன்றைய இனப்பிரச்சினைக்கு இணக்கமான நிரந்தரத்தீர்வு காண்பது இலேசான காரியமாக எவரும் கருதி விட முடியாது. பல்வேறு சமூக சக்திகள் இதில் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் தவிர்க்க முடியாத வகையில் காலதாமதத்திற்கு இட்டுச் செல்லும் என்பது வெளிப்படையான உண்மை.

முட்டுக்கட்டைகள் வரும்

இலங்கையின் தேசியப் பிரச்சினையாக வளர்ந்துள்ள இன்றைய இனப்பிரச்சினை தமிழ் பேசும் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகள் தீர்க்கப்படும் அதே வேளை சிங்கள மக்களும்; அதனை ஏற்கக் கூடிய வகையில் பேச்சு வார்த்தையின் பயணம் அமைந்திருக்க வேண்டுமென்ற கட்டாயதிலையைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்படுத்தி உள்ளது.

ஒரு பகுதியினரின் நலன் பாதுகாக்கப்பட்டு மறுசாராரின் நலன் பாதிக்கும் வகையில் தீர்வு முயற்சிகள் அமையுமானால் நிரந்தர சமாதானத்தை நாம் எட்டிவிட முடியாது போய்விடும் இந்த நிலையில் நடைபெறும் பேச்சுவார்த்தை பல்வேறு முட்டுக்கட்டைகளைச் சந்திக்க வேண்டியது தவிர்க்க முடியாததே.

இரு தரப்பினரும் தமது அபிலாஷைகளை வலியுறுத்த முன்வரும் போது பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்படுவது இயல்பானதே. இவற்றையெல்லாம் களைந்து பேச்சுவார்த்தையை முன்னெடுத்து செல்வது சம்பந்தப்பட்டவர்களது மதி நுட்பத்திலும் ஆளுமையிலுமே தங்கியுள்ளது.

ஜூலைக்கு முன் சாத்தியமாகுமா?

எனினும் இந்தப் பாரிய பணி எதிர்வரும் ஜூலை 11இற்கு முன்னர் சாத்தியமாகும் என்பது சந்தேகமான சமாச்சாரமாகவே எண்ண வேண்டியுள்ளது.

நாட்டுக்காக அரசமைப்பே அன்றி அரசமைப்புக்காக நாடு அல்ல

இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களுக்குரிய பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு அமையவேண்டுமாகவிருந்தால் தற்போதையுப் அரசமைப்பை ஒரு பூரணசமஷ்டி அலகாக உருவாக்குவதன் மூலமே சாத்தியமாக்கலாம். இன்று சமஷ்டி அமைப்புப் பற்றி மக்களிடையே பல்வேறு விதமான கருத்துப் பரிமாற்றங்கள் எழுந்து கொண்டிருக்கின்றன,

அத்துடன் புலிகளும் தமது ஈழக் கோட்பாட்டைக் கைவிட்டு அதிகாரங்கள் நன்கு அமையப்பெற்ற சமஷ்டியமைப்பை பதாம் பரிசீலிப்பதற்கு தயாராகவிருப்பதாக அறிவித்துள்ளனர். மேலும் புலிகள் தமது ஈழக் கோட்பாட்டைக் கைவிட்டிருப்பது அரசாங்கத்திற்குக் கிடைத்த பெரு வெற்றியென திருமலையில் ஜனாதிபதி சந்திரிகாபண்டாரநாயக்ககுமாரதுங்க தெரிவித்திருப்பதும் இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கதே.

சமஷ்டி கொடுப்பது கடினமல்ல

பிரிவினை [illegible] தவிர்ந்த வே[illegible] தமிழ்பேசும் மக்களுக்குக் கொடுக்கத்தயாராகவிருக்கின்றோமென ஒரு சந்தர்ப்பத்தில் கூறியசந்திரிகா அரசாங்கத்திற்கு, சமஷ்டியமைப்பைத் தமிழ்பேசும் மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதென்பது அவ்வளவு கடிமான காரியமாக அமையப் போவதில்லை. எனினும் இந்த விடயத்தில் சிங்கள மக்களின்அபிலாஷைகளையும் திருப்திப்படுத்தும் வகையிலேயே சந்திரிகா செயற்பட வேண்டியுள்ளது. தமது அரசியல் எதிர்காலத்திற்கும் இது இன்றியமையாததொன்றாகவே இவர் கருதக் கூடும்.

சிங்கள மக்களைப் பொறுத்தளவில் சமஷ்டி என்றால் அது ''பிரிவினையே'' என்ற மனோபாவம் வளர்ந்த நிலை ஒன்றுள்ளது. இதனைச் சில பேரினவாதச் சக்திகள் மக்களைத் தவறான திசைக்கு வழிநடத்துவதற்கு ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவதும் தென்னிலங்கை அரசியலில் நாம் பெற்ற அனுபவங்கள்.

இதற்குப் பரிகாரமாக சமஷ்டி என்ற சொல்லுக்குப் பதிலாக அதற்குச் சமமாக வேறு ஓர் பதத்தினைப் பிரயோகிக்கலாமென்ற கருத்தும் சிலரால் தெரிவிக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக எமது தொடர்புச்சாதனங்கள் ''சமஷ்டி என்பது பிரிவினை அல்ல'' என்ற கருத்தினை மக்களுக்கு மிகச் சுலபமாக எடுத்துச் செல்லலாம் என்பதும் கவனிப்புக்குரிய விடயமாம்.

சமஷ்டியே பொருத்தம்

புதிய அரசமைப்பானது ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி ஒரு பல்லின சமூகத்தை ஏற்பதாக அமைய வேண்டும். பல மொழி பேசும் பல மதங்களைப் பின் பற்றும் ஒரு நாட்டிற்கு சமஷ்டியாட்சியே [illegible] அறிஞர்களின் கருத்து இலங்கைக்கும் [illegible] மானதாகவே அமைந்துள்ளது.

இன்றைய நிலையில் எழுந்துள்ள இம் முரண்பாட்டிற்கேற்ற வகையில் அரசமைப்பு ஆக்கப்பட வேண்டுமேயொழிய அரசமைப்புக் கேற்றவாறு பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்ற சிந்தனை ஏழக்கூடாது. ''நாட்டுக்காக அரசமைப்பே தவிர அரசமைப்புக்காக நாடு அல்ல'' என்ற நிலைபேணப்பட வேண்டும்.

ஒரு நாடு தான் எதிர்நோக்கும் முரண்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கூடிய வகையிலும் தனது அரசமைப்பை அமைத்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். அரசமைப்பானது மக்களை வழிப்படுத்துவதற்காக ஆக்கப்பட்ட சாதனமே ஒழிய அவர்களை பிரிவபடுத்தும் குறுகிய நோக்கம் கொண்டதாக ஆக்கக் கூடாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர முன்வரவேண்டும்.

முந்திய மூன்றும் தவறிவிட்டன

சுதந்திர இலங்கையில்நடைமுறையில் இருந்த மூன்று அரசமைப்புக்களும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் தவறிவிட்டன. இவை பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கி வளர்த்தனவே தவிர மக்களதுபிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையவில்லை.

சோல்பரி யாப்பினைத் தவிர்ந்த ஏனைய இரண்டு யாப்புக்களும் இலங்கை ஒற்றையாட்சி நாடு என்பதை திட்டவட்டமாக விதந்துரைத்துள்ளன. இந்த மூன்று யாப்புக்களினதும் அனுபவத்தினடிப்படையில் புதிய யாப்பினை வரைவோர் சமஷ்டியாட்சியை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில் தமிழ் பேசும் மக்கள் விழிப்பாக இருக்கின்றனர்.

எனினும் அரசின் நிலைப்பாடு இந்த விடயத்தில் எத்தகையது என்பதுதான் இன்னும் திட்டவட்டமாக அறிய முடியாத நிலை உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த 17 வருட ஆட்சிக் காலத்தில் பிரதான பேரினவாதக் கட்சிகள் இனப்பிரச்சினைக்கு திட்டவட்டமான நிரந்தரத் தீர்வினை முன்வைக்காத நிலை, இன்றும் ஆட்சிநிலை மாற்றத்தின் போதும் கூட பொதுஜன ஐக்கிய முன்னணியும் அந்தப் பாணியிலேயே தமது அரசியலை நடத்திச் செல்கிறது

இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான வழிமுறை பேணப்பட வேண்டும் என்ற நிலைக்கு மக்கள் தேர்தலில் அளித்த பேராதரவு நீடித்து நிலைதிருக்க வேண்டுமானால் சந்திரிகா அரசாங்கம் உடனடியாக இப் பிரச்சினைக்கான தமது தீர்வுத் திட்டத்தை மக்கள் முன்னிலையில் வெளியிட வேண்டும். தமது தீர்வுத் திட்டம் முடிவடையும் தருணத்திலிருப்பதாக கூறியுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி அதனை வெகு விரைவில் மக்கள் முன் நிறுத்த வேண்டும்.

பேரினவாத சக்திகளால் முன்வைக்கப்படும் எந்தவொரு திட்டமும் தமிழ் பேசும் மக்களால நன்கு பரிசீலிக்கப்பட வேண்டியதொன்றாகவே இருக்கும். அற்ப சொற்ப நலன்களுக்காக மக்கள் தமது நிலைப்பாட்டிலிருந்து விலகப்போவதில்லை.

தமிழர்கள் ஏமாறத் தயாரில்லை

தமது உரிமைகள் நிரந்தரமாக நிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு குரல் எழுப்பும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகள் புதிய அரசமைப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும். பேரினவாத சக்திகளால் காலம் காலமாக ஏமாற்றப்பட்டுவந்த இம் மக்கள் இனியும் ஏமாறத் தயாராகவில்லை.

இன்றைய நிலையில் வட-கிழக்கைப் பொறுத்த வரை சாதாரண மனித வாழ்க்கை மிகவும் சீர்குலைந்த நிலையிலேயே உள்ளது பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, அத்தியாவசியப் பொருள்களைப் போதியளவு பெற்றுக்கொள்ள முடியாமை, மின்சார வசதியின்மை தொடர்பாடலின்மை முதலான பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்திருக்கும் இப்பகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினை முதலில் தீர்க்கப்பட வேண்டும்.

அன்றாடப் பிரச்சினைக்கு முன்னுரிமை

அதன் பின்னரே சமாதானத் தீர்வு பற்றி ஆழமான ஆலோசனைகள் நடைபெற வேண்டும் இதனை விடுத்து அரசியல் தீர்வுக்கு முன்னுரிமை அளித்து மக்களின் அன்றாடப் பிரச்சினையை திட்டமிடலற்ற அடிப்படையில் மேற்கொள்ள முயன்றால் விரும்பத்தகாத விளைவுகளையே நாம் அறுவடை செய்ய வேண்டியிருக்கும்.

''பசித்தவனுக்கு உணவு கொடுத்த பின்னரே உபதேசம் அளி'' என்ற இராமகிருஷ்ண பரமஹம்சரின் கூற்று இந்த இடத்தில் நினைவு கூரத்தக்கது

வயிற்றுப்பசியுடைய பக்தன் ஒருவனுக்கு உபதேசம் அளித்தால் அவனுக்கு அந்த உபதேசத்தின் உள்ளடக்கம் விளங்கப் போவதில்லை. இதனால் அவனுக்கு பசியைப் போக்குவதற்காக உணவு கொடுத்த பின்னரே உபதேசம் அளிக்கப்பட வேண்டும் என்றார் பரமஹம்சர்.

இதே போல கடந்த இரண்டு தசாப்தங்களாக கோர யுத்தத்திற்கு முகம் கொடுத்த மக்களின் அன்றாடப் பிரச்சினை முதலில் தீர்க்கப்பட வேண்டும். அதன் பின்பே அரசியல் தீர்வு பற்றி பலமானகாலடி எடுத்து வைக்க வேண்டும்,

இதன் வழியிலேயே இனப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு எட்டப்பட்டு அது அரசமைப்பிலும் புகுத்தப்படலாம்.

ஆனால் ஜூலை 11 என்ற குறுகிய கால கட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அதனை புதிய யாப்பிலும் இடம் பெறச் செய்யலாமென்ற அரசின் கனவு எவ்வளவு தூரம் சாத்தியமானது என்று பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

★

நிரு பட்டப்படிப்பு பிரிவு

கோண்டாவில்.

G·A·Q· 1995 (யாழ்ப்பாணம்)

பொருளியல் — திரு. உதயன்
தமிழ் — திரு. குழந்தை
இந்துநாகரீகம் — திரு. சோதி
புவியியல் — திரு. வேலா

விரிவுரைகள் நடைபெறுவதால் அனுமதிகளை உடன் பெற்றுக் கொள்ளவும்.

G·A·Q· 1996 (யாழ். பேராதனை)

புதிய பிரிவு ஆரம்பம்:
05 — 04 — 1995

(சி-816)

31-ம் நாள் நினைவலைகள்



தோற்றம்:
22
—
05
—
1931

மறைவு:
20
—
02
—
1995

அமரர் ம. பாலச்சந்திரன்

(முன்னாள் யாழ் /ஐக்கிய வியாபார சங்க ஊழியர்)

திதி: 22 – 3 – 1995

எங்கள் அன்புத் தெய்வமே அப்பா
அணையாத தீ மானீரோ
உங்களின் அன்பு சொற்களை
கேட்க செவிகள் ஏங்குகின்றன
உங்களைப் போல் உற்றதுணை
இன்றி உள்ளம் சோருகின்றோம்

உங்கள் பிரிவால் தவிக்கும்:
அன்பு மனைவி, மகன், மகள்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

(35825)

---

31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் சண்முகம் கோபாலசாமி

(ஓய்வு பெற்ற இலிகிதர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்.)

தோற்றம்:
03 — 01 — 1934

மறைவு:
20 — 02 — 1995

141/4, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வரும், யாழ் கல்வித்திணைக்களத்தில் இலிகிதராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவருமான திரு. சண்முகம் கோபாலசாமியாகிய எமது தந்தை தன் பயிர்களினை தண்ணீர் ஊற்றி வளர்த்து வந்தார். அந்தப் பயிர்கள் வளர்ந்து வந்து பயனைத் தரும் வேளையிலே காலனவன் தன் பாசமதை வீசி விட்டான். எங்கு சென்றீர்கள் அப்பா வெகு சீக்கிரமாய் எம்மை விட்டு. மறுபிறவி எம்மிடையே எடுப்பீர்கள் என்றெண்ணி உங்கள் நினைவாக, இன்று (22 03-1995) புதன்கிழமை காலை ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளும், அந்தியேட்டிக் கிரியைகளும் எமது இல்லத்தில் நடைபெறும். மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடழைக்கின்றோம்.

இங்ஙனம்;
மனைவி, மக்கள்,
மருமகன்.

141/4, கே கே எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(35828)

அகில இலங்கை கம்பன் கழகத்தின்
1995ஆம் ஆண்டிற்கான

'மகர யாழ்' விருது பெறும்

தன்னலமற்ற பெருஞ் சேவையாளன்,
எமது பாடசாலையின் மேலாண்மையாளர்

வைத்திய கலாநிதி
து. வி. ஜெயக்குலராஜா
அவர்களை

எம் இதயம் கனிந்த மகிழ்வுடன்
வாழ்த்துகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
பிறபணியாளர்கள்.
மாணவர்கள்.

நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன்
இழந்தோர் பாடசாலை.
கைதடி.

(சி/815)

The Members of the board and Staff
Of

ST. LUKE'S METHODIST HOSPITAL
PUTUR

CONGRATULATES

DR·T·W.JEYAKULARAJAH

For having won

THE MAHARA YARL VIRUTHU

For 1995

Nothing Recedes Like Success

**The Administrative,
Secretary.**

[சி/821]

யாழ். இந்துக்கல்லூரி பழையமாணவர்சங்கம்
வருடாந்த பொதுக்கூட்ட

அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை 16-04-95ல் நடத்துவதற்கு செயற்குழு தீர்மானித்துள்ளது. எனவே பொதுக் கூட்டத்திற்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் பிரேரணைகளை 31-03-95க்கு முன் செயலாளர், யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம், யாழ்.இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

பொதுக் கூட்டம் நடைபெறும் தினம் பழைய மாணவர் மதிய போசனத்தில் கலந்து கொள்ள விரும்பும் அங்கத்தவர்கள் கல்லூரி உப அதிபர் திரு. பொ. மகேஸ்வன் [பொருளாளர்] அவர்களிடம் 10-04-95க்கு முன் ரூபா 50/- செலுத்தி பதிவு செய்து பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்.
யாழ். இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்,

95-03-22

(சி/824)

அங்கத்துவம் - பெறுதல்

மக்கள் நலன் காக்கும் பிரிவு

1. கோப்பாய் பிரதேச செயலர் பிராந்தியத்திற்குட்பட்ட எல்லைப் பிரதேசத்திற்குள் வதியும் அல்லது தொழில் புரியும் பதினெட்டு (18) வயதிற்கு மேற்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் அங்கத்தவராக சேரத் தகுதியுடையவர்கள்.
2. அங்கத்தவராவதற்குரிய அமைப்பினால் வழங்கப்படும் அங்கத்தவர் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து நூற்றியிருபது ரூபாவை (120/-) ஒரே தடவையில செலுத்துவதன் மூலம் ஆயுட்கால அங்கத்தவராகலாம்.
3. ஓர் ஆயுட்கால அங்கத்தவரின் குடும்ப அங்கத்தவர்கள் இவ்வமைப்பின் அங்கத்தவராகவே கருதப்படுவர்.

மேற்படி விடயங்களை கருத்திற் கொண்டு இவ்வமைப்பில் அங்கத்தவராக இணைந்து கொள்ள விரும்புவோர் மேலதிக விபரங்களுக்கு பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி, கோப்பாய் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது தலைமையலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம் என்பதை இத்தால் பகிரங்கப்படுத்தி நிற்கின்றோம்.

நன்றி

மக்கள் நலன் காக்கும் பிரிவு.
இருபாலைச் சந்தி, கோப்பாய்.

(35830)

ஆலயங்களில்

யாழ்ப்பாணம், மார்ச் 22

சாவகச்சேரி – நுணாவிற்குளம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று வந்த மண்டலாபிஷேக பூர்த்தியை ஒட்டி இன்று புதன்கிழமை காலை 7 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும்.

இரவு 7 மணிக்கு அம்பாள் வீதியுலாவும் நாளை வியாழக்கிழமை முற்பகல் முருகக்கச்சேரி, வானர நடனம் என்பன இடம்பெற்று அன்னதானமும் நடைபெறும்.

(இ-14)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 22

கந்தர்மடம் செட்டிய தாழ்வு ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெற்று தொடர்ந்து 12 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் இடம் பெறும்.

இந் நாட்களில் விசேட மேளக்கச்சேரிகள் சொற்பொழிவுகள், கதாப் பிரசங்கங்கள் என்பனவும் இடம் பெறும். (இ-14)

சுவர் இடிந்து சிறுமி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

இராணுவ நடவடிக்கையின் போது சேதமடைந்திருந்த கட்டடத்தின் அருகில் இருந்து விளையாடிய சிறுமி மீது சுவர் இடிந்து விழுந்ததால் சிறுமிபடுகாயமடைந்தார்.

நல்லூர் அரசடிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில், அச்சுவேலியில் இருந்து இடம்பெயர்ந்து அங்கு வசித்துவரும் தர்மராசா றெஜினா மாலினி (வயது 13) என்ற சிறுமியே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

வடக்குக்கு கனடா நிவாரணம்

கொழும்பு, மார்ச் 22

சமாதானத்துக்கான கனடாவின் நிவாரண அமைப்பு ஒன்று, ஒரு கொள்கலன் நிறைந்த நிவாரணப் பொருள்களை வடபகுதிக்கு விரைவில் அனுப்பிவைக்கவிருக்கிறது.

மருந்துவகைகள், ஊட்டச்சத்து வில்லைகள், சக்கரவண்டிகள். குழந்தைகளுக்கான பராமரிப்புப் பொருள்கள் முதலியன இக்கொள்கலனில் அனுப்பப்படுகின்றன.

இம்மாதம் 25ஆம் திகதி டொரண்டோவில் இருந்து புறப்படும் இக்கப்பல் எதிர்வரும் மேமுதல் வாரத்தில் கொழும்பை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கனேடிய செஞ்சிலுவைச் சங்கம், நோவா பார்மஸிமிட், கனடாவிலுள்ள குரோஷன் சங்கம் ஆகியன இந்நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளன. [இ-எ]

வீதி விளக்குகள் விஷமிகளால் சேதம்

வடமராட்சி, மார்ச் 22

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள வீதி விளக்குகள் மீண்டும் மீண்டும் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

இப பகுதியில் முதலாம் கட்டைச் சந்தியிலுள்ள ரஞ்சன் சித்தப்பா பூங்காவிற்கு அருகிலும், நாலாம் குறுக்குத் தெருச் சந்தியிலும் அமைக்கப்பட்டுள்ள வீதி விளக்குகள் இவ்வாறு அடிக்கடி சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன் புனித அந்தோனியார் கோயில் வீதிப் பெயர்ப்பலகையும் உடைத்துச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. (இ-173)

மலசலகூட வசதி இல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். செட்டித்தெரு மெதடிஸ் மிஷன் தமிழ்கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள், மலசலகூட வசதியின்றி அவதிப்படுகின்றனர்.

இப்பாடசாலையில் புங்குடுதீவு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையும் இயங்கி வருகிறது. இரண்டு பாடசாலைகளிலுமாக சுமார் 250 மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக பாடசாலை வட்டாரங்கள், சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தனர்.

எனினும் அவர்கள் இது தொடர்பாக அக்கறைகொள்ளவில்லை என்றும், எதுவித நடவடிக்கைகளையும் எடுக்க முன் வரவில்லை என்றும்தெரிவிக்கப் படுகிறது. [5-4]

சந்திரிகா, சிறிமா, ரணில் முஸ்லிம் காங். மாநாட்டில்

அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 13 ஆவது வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா கலந்து கொள்ளவுள்ளார்.

ஐ தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, அக்கட்சியின் தவிசாளர் ஜனாப் ஏ. சி. எஸ் ஹமீது, பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஹேமாவை 5 மணிநேரம் சி. ஐ. டி. விசாரித்தது!

கொழும்பு,மார்ச்.22

ஜனாதிபதி மாளிகையில் இருந்த விலையுயர்ந்த இரத்தினக்கல் காணாமற்போன சம்பவம் தொடர்பாக இரகசியப்பொலீஸார் நடத்திய விசாரணை அறிக்கை சட்டமாஅதிபரிடம் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் மனைவி ஹேமாவின் வாக்குமூலத்தையும்இரகசியப்பொலீஸார் பதிவுசெய்திருந்தனர்.ஹேமா பிரேமதாஸாவை அவரது விஜேராம மாவத்தை வாசஸ்தலத்தில் வைத்து ஐந்து மணித்தியாலங்களுக்கு மேலாக இரகசியப்பொலீஸார் விசாரணை செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரேமதாஸாவின் பிள்ளைகளான சஜீத்தும் துலாஞ்சலியும் இச்சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலீஸாரினால் சுமார் 8 மணிநேரம் விசாரிக்கப்பட்டனர் என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

[உ-எ]

அச்சுவேலி ஆவரங்கால் புத்தூர்

வாழ் மக்களுக்காக யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவில்

இலவச கண் சத்திர சிகிச்சை முகாம் – 7

[Free Cataract Surgery Camp]

இடம்:- அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை
காலம்:- 24 . 3 . 95 வெள்ளி காலை 7 மணி

கண்ணில் பூப்படலம் [கற்றரக்ட்] நோயினால் பாதிக்கப்பட்ட 55 வயதிற்கு மேற்பட்டோருக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படும்

அவர்களுக்கான சத்திர சிகிச்சை எதிர்வரும் 9 – 4 – 95 ஞாயிறு காலை 7 மணி முதல் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் நடைபெறும்.

★ ஏற்கனவே சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்டவர்கள் சங்கானை வைத்தியசாலையில் 1 – 4 – 95 திகதிக்கு முன்பு பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

[சி/825]

இ. துரையப்பா அன்சன்ஸ்

தொல்புரம், சுழிபுரம்.

இ. துரையப்பா அன்சன்ஸ் தாபனத்திலும் அதன் பங்காளர்கள் திரு. து இராசரத்தினம், திரு. து. நடராசா, (காலம் சென்ற) திரு. இ சண்முகசுந்தரம், திருமதி விமலாதேவி விக்கினேஸ்வரராசா ஆகியோரிடமும் பணம் வைப்புச் செய்தோரும், நகை அடகு வைத்து அங்கு 1985இலும், 1987இலும் நடைபெற்றகளவினால் அவற்றைத் திருப்பிப் பெறாதவர்களும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்கு பின்வரும் விவரங்களைத் தெரிவிக்குமாறு வேண்டுகின்றோம்.

1. பணம் வைப்புச் செய்தவர் அல்லது அடகு வைத்தவர் பெயர், முகவரி.
2. தற்போது விண்ணப்பித்தவர் வைப்புச் செய்தவர் அல்லாதவராயின் வைப்புச் செய்தவரின் வாரிசு என்பதற்கான விளக்கமும் அத்தாட்சியும்.
3. வைப்புச் செய்த அல்லது அடகு வைத்த திகதியும் தொகையும்.
4. இதுவரை மீளப் பெற்ற தொகைகளும் பெற்ற திகதிகளும்.
5. தற்போது வரவேண்டியுள்ள தொகையும், அத்தொகையும் எவ்வாறு கணிக்கப்பட்டது என்பதற்கான விளக்கமும்.

மேற்குறிப்பிட்ட விவரங்களைச் சேர்ப்பிக்க வேண்டிய முகவரி;

எஸ். செல்வேந்திரா அன் கோ,
பட்டயக்கணக்காளர்,
இல. 182 - 1/5, அர்ச்சுனா வீதி,
(ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்:
து. இராசரட்ணம், து. நடராசா.

(35813)

முக்கிய அறிவித்தல்

கொக்குவில் மேற்கு
மஞ்சவனப்பதி முருகன் ஆலய
மகா சபைக் கூட்டம்

இடம்: ஆலய மண்டபம்
காலம்: 27 - 3 - 95 திங்கட்கிழமை பி. ப. 3 மணி
விடயம்; ஆலய நகல் யாப்பை அங்கீகரித்தல்

அங்கத்தவர்கள் யாவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு: இக்கூட்டம் 12 – 3 – 95 அன்று நடைபெறவிருந்து பின்பு ஒத்திவைக்கப்பட்டதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அ. பத்மநாதன்
கௌரவ செயலாளர்
நிர்வாக சபை

மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(35839)

உதயன்
392/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

தெருவில் தேங்காய் எடுத்து......

ஸ்ரீலங்கா அரச அதிகாரிகளில் பலரும், முக்கிய பதவிகளை அலங்கரிப்பதால் தாம் எதனையும் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறார்கள்.

வாயில் வந்ததை எல்லாம் கூறுவதால், அது அரசாங்கத்தைப் பெரிதும் பாதிக்கிறது என்பதை அவர்கள் உணராதது ஏனோ?

ஜனாதிபதியின் செயலாளரும், அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களின் அரசதரப்புப் பிரதிநிதிகளின் தலைவருமான குசும்சிறி பாலபட்டபெண்டியும் இந்த வகையைச் சேர்ந்தவராகிவிட்டார்!

போர்க் கைதிகளாக தமது காவலில் இருந்த 15 பொலிஸாரையும், இராணுவச் சிப்பாய் ஒருவரையும் விடுதலைப் புலிகள் மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்ததற்கு நன்றி தெரிவிக்க மறந்த அவர்—

விடுதலைப் புலிகள் தம்மிடம் காவலில் உள்ள மற்றும் 22 படையினரையும் விடுதலை செய்வர் என்று அரசு எதிர்பார்ப்பதாக நம்பிக்கை தெரிவித்துள்ளார்!

ஏற்கனவே நாம் இப்பத்தியில் சுட்டிக்காட்டியவாறு, கனவான்தனமுள்ள அரசாங்கமெனில் விடுதலைப்புலிகளின் பெருந்தன்மைக்கு கைமாறாக, பிரதியுபகாரமாக அரசாங்கம் தனது நல்லெண்ணத்தை ஏதோ ஒரு வகையில் காட்டியிருக்க வேண்டும். அது குறித்து மூச்சுவிடாமல், விடுதலைப் புலிகளிடமிருந்து மேலும் நல்லெண்ணத்தை எதிர்பார்க்கிறார் பாலபட்டபெண்டி!

போர்க் கைதிகள் 16 பேரையும் பயன் எதுவும் கருதாமல், முழுக்க முழுக்க மனித நேயத்தின்பாற்பட்டே தலைவர் பிரபாகரன் விடுதலை செய்தார். அவர் அரசியல் பயன்கருதா மனிதப் பணி செய்தார் என்பதற்காக, தொடர்ந்தும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று பாலபட்டபெண்டியும் அரசும் எதிர்பார்ப்பது நாகரிகமற்றதாகும்.

அதற்கும் மேலாக, சமாதானப் பேச்சுக்களின் விளைவாகத் தான் விடுதலைப்புலிகள் தமது காவலில் இருந்த போர்க் கைதிகளை விடுதலை செய்தனர் என்று இரண்டையும் சம்பந்தப்படுத்த முயல்வது ஏமாற்றுத்தனமாகும். அதுவும், போர்க் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தபோது மௌனம் சாதித்த அரசு, அவர்கள் விடுதலையான பின்னர் தமது திறமையே காரணம் என்று சொந்தம் கொண்டாடி திரிபுபடுத்துவது கண்டனத்துக்குரியது.

அரசாங்கம் என்றால் பதவியில் இருக்கும் கட்சிக்கு, அரசியல்வாதிகளுக்கு அரசியல் ஆதாயம் தேடும் நிறுவனம் என்ற வழமை தெற்கில் வளர்ந்துவிட்டது.

பொதுமக்கள் நலன் சம்பந்தப்பட்ட விடயங்களில் கூட, அவை தமக்கு பாதகமாக, தமது அரசியல் நலனுக்கு கெடுதி தரும் என்று கருதினால் தூரவிலகி நிற்பதும், மௌனம் சாதிப்பதும், தெரிந்தும் தெரியாதது போலத் தட்டிக் கழிப்பதும்—

வேறு வகைகளால் பொது மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகளுக்குத் தாமே காரண கர்த்தாக்கள் அல்லது உந்து சக்தியினர் என்று கூறி அரசியல் ஆதரவு திரட்ட முயல்வதும்— தெற்கு அரசியல்வாதிகளுக்கு கைவந்த கலை.

தெருவில் தேங்காயை எடுத்து வழியில் பிள்ளையாருக்கு அடிக்கும் இந்தவகை அரசியல் போலித் தனங்களை தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமாதானப் பேச்சுக்களில் அனுமதிக்க முடியாது.

அரசு — புலிகள் பேச்சுவார்த்தை தடைப்பட்டு நிற்பதற்கான காரணங்களில், அரசியல் லாபம் தேடுவதற்காக, தமிழ் மக்களின் நலனை புறந்தள்ள அரசு முயற்சித்ததும் ஒன்றாகும்.

தமிழர்களின் வாழ்க்கைக் கஷ்டங்கள் அரசாங்கம் கூறுவது போல பெரிதாக நீங்கி விடவில்லை என்பதனை விடுதலையான போர்க் கைதிகளே வெளிச்சமாகக் கூறியுள்ளனர்.

எனவே, தமிழ் மக்களின் கஷ்டங்களைத் தீர்த்துக் கொண்டு அரசியல் தீர்வு பற்றி ஆராய்வது குறித்து இந்தக் கட்டத்திலாவது அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

மோதல் தவிர்ப்பு முறிவடைந்தால் முன்னர் போல படையினருக்கு பேரிழப்பு ஏற்படாது

இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 22

மீண்டும் யுத்தம் மூண்டால் முன்னரைப்போன்று புலிகள் திடீர் தாக்குதலை நடத்தி படையினருக்கு பேரழிவுகளை ஏற்படுத்த நாம் அனுமதிக்க மாட்டோம். ஏனெனில் மோதல் தவிர்ப்பு அமுலுக்கு வந்த போதிலும் படையினர் தமது உஷார் நிலையைத் தளர்த்தவே இல்லை.

இலங்கை இராணுவத் தளபதி ஜெரிடி சில்வா மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

நாமும் சமாதானத்தையே விரும்புகின்றோம். வேறு எவரையும் விட படைவீரர்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்.

பேச்சுவார்த்தையின் முடிவிலே சமாதானம் தான் வரும் என்றால், அதற்கு தங்கள் ஆதரவு உண்டு என்றே படையினர் கூறுகிறார்கள்.

போருக்கு முடிவைக் காண்பதற்கு அரசு — புலிகள் நடத்தி வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இராணுவம் உறுதியான ஆதரவை அளித்து வருகின்றது.

ஆனால் பேச்சுவார்த்தை தோல்வியடையுமானால் — மீண்டும் போருக்கு செல்வதற்கும் இராணுவம் தயாராகவே உள்ளது.

மோதல்தவிர்ப்பை பயன்படுத்தி விடுதலைப் புலிகள் எரிபொருளையும் ஏனைய பொருள்களையும் சேகரித்து வருவதோடு—

அரசியல் மற்றும் இராணுவரீதியான கட்டுப்பாட்டை மீளப் பெறுவதற்கும் தற்போதைய சூழ்நிலையை பயன்படுத்தி வருகிறார்கள்

பயமுறுத்தல்கள் பணம் பறிப்பு குறித்து எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

சமாதானத்துக்கு ஒரு வாய்ப்பை நாம் கொடுக்க வேண்டும் பொறுமையும் சகிப்புத்தன்மையும் இதற்கு தேவை. நம்பிக்கையும் விசுவாசமும் இல்லாமல் சமாதானத்தைக் காணமுடியும் என்று நான் நினைக்கவில்லை.

நாம் 11வருடங்களுக்கு முன்னர் சண்டையை ஆரம்பித்த வேளையில் இருந்ததைப் போலவே — இராணுவதீர்வு அண்மையில் தெரியவேயில்லை என்று ஜெரிடிசில்வா தெரிவித்தார்.

[இ-14]

சமாதான வாய்ப்பு ஒரு சதவீதம் இருந்தாலும் பயன்படுத்துவோம்

அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 22

சமாதானத்துக்கான வாய்ப்பு ஒரு சதவீதம் இருப்பினும் அதனையும் பயன்படுத்த வேண்டும்.

அமைச்சர் அஷ்ரப் 'சண்டே ரைம்ஸுக்கு' அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்பு முறைதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகும் என்று நான் கருதவில்லை

பிரச்சினைக்கு மருந்தாக சமஷ்டி அரசமைப்பு இருக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை என்பதே எனது கருத்தாகும்.

சமஷ்டி அரசமைப்பு உள்ள நாடுகள் பலவற்றில் நிறைய பிரச்சினைகள் உள்ளன.

ஒற்றையாட்சி அரசமைப்பு உள்ள நாடுகளில் குறைந்தளவே பிரச்சினைகள் உள்ளன.

இப்போது பிரச்சினைக்கு சமஷ்டி முறை மூலம் தீர்வு காணும் அணுகுமுறையை ஆரம்பித்துள்ளோம் —

இப்படி அஷ்ரப் மேலும் தெரிவித்தார்.

[இ எ]

கிழக்கில் தமிழ் அமைப்புக்களும் தம்மை பலப்படுத்தும் முயற்சியில்!

கொழும்பு, மார்ச் 22

மட்டக்களப்பில் படையினர் தமது காவலரண்களை பலப்படுத்தி வரும் அதே வேளையில், தமிழ் அமைப்பு ஒன்றும் நகரில் உள்ள தனது அலுவலகத்தைப் பலப்படுத்தி வருவதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல்கள் எதுவும் இடம் பெறாத போதிலும கூட— மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றி வளைப்புகள், தேடுதல்கள் மீண்டும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும்—

சோதனை நிலையங்களில் சாதாரண பொதுமக்கள் துருவித்துருவி விசாரிக்கப்படுவதோடு பொதிகளும் சோதனையிடப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-14)

பாண்டிச்சேரியில் உள்ளது போன்று மலையகத்திலும் மாநில கவுன்ஸில்

மலையக மக்கள் முன்னணி யோசனை

கொழும்பு, மார்ச் 22

தமிழ் நாட்டின், பாண்டிச்சேரியில் உள்ளது போன்று மலையக மக்கள் செறிவாக வாழும் பகுதிகளை ஒன்றிணைத்து 'மாநில கவுன்சில்' ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

அரசமைப்பைத் திருத்துவது தொடர்பான விசேட நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்த யோசனையில் மலையக மக்கள் முன்னணி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

மலையக முன்னணி முன்வைத்துள்ள மற்றும் பிரதான ஆலோசனைகளாவன.

★ சிறுபான்மை மக்கள் மீது பாரபட்சம் காட்டப்படும் சந்தர்ப்பங்களில், அது தொடர்பாக விசாரணை செய்ய அதிகாரம் உள்ள தேசிய சபை ஒன்று நிறுவப்பட வேண்டும்.

★ நாடாளுமன்றத்தில் சிறுபான்மை மக்களின் நலன்களோடு தொடர்புபட்ட சட்டங்கள் எதனையும் நிறைவேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை ஒப்புதலைப் பெற வேண்டும்.

★ சிறுபான்மையினர் எந்த மாவட்டத்தில் வசித்தாலும், தாம் விரும்பும் மாவட்ட அல்லது தொகுதி வேட்பாளருக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்.

★ அரசமைப்பில் இடம் பெறும் பாரபட்சங்களை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

★ மலையக மக்களின் பின்தங்கிய நிலைமையைக் கருத்திற் கொண்டு அவர்களின் நிலையை உயர்த்த வழி செய்யப்பட வேண்டும்; அதுவரை அவர்களுக்கு, பின்தங்கிய சமூகத்திற்கு வழங்கப்படுவது போன்று சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.

★ பாரபட்சமான பிரஜா உரிமைச் சட்டம் நீக்கப்பட்டு, இந் நாட்டில் பிறந்த அனைவரையும் இந் நாட்டின் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

★ மலையக மக்களுக்கு மாத்திரம் பிரஜா உரிமைச் சான்றிதழ் வழங்கும் முறை நீக்கப்படல் வேண்டும்.

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் பி. ஏ. காதர், உப தலைவர் சரத் அத்துக்கோறள லோறன்ஸ், அமால் இளைய சிங்க ஆகியோர் நாடாளுமன்றக் கட்டடத்தில் இயங்கும் அமைச்சர் ஜி எல். பீரிஸ் தலைமையிலான தெரிவுக் குழுவைச் சந்தித்து மக்கள் முன்னணியின் ஆலோசனைகளைச் சமர்ப்பித்தனர். [இ-5]

செயற்குழு உறுப்பினர் பதவியிலிருந்து திவாரி ராஜினாமா!

காங்கிரஸுக்கு நெருக்கடி

புதுடில்லி மார்ச் 22

காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரான என். ரி. திவாரி கட்சியின் செயற்குழு உறுப்பினர் பதவியில் இருந்தும் ஏனைய பொறுப்புக்களில் இருந்தும் ராஜினாமாச் செய்துள்ளார்.

பட்டின்லால் கூட்டத்தில் பங்குபற்றுவது தொடர்பாக காங்கிரஸ் தலைமைப்பீடத்துக்கும் திவாரிக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு அவரது ராஜினாமாவுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே காங்கிரஸில் இருந்து மனிதவள அமைச்சர் அர்ஜுன்சிங் பதவி விலகியது தெரிந்ததே.

மற்றொரு சிரேஷ்ட காங்கிரஸ்காரரான திவாரியின் ராஜினாமா நரசிம்மராவ் தலைமையிலான அரசுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி இருப்பதாக புதுடில்லியில் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், ராஜினாமாவை வாபஸ்பெறும்படி காங்கிரஸ் தலைவர்கள் பலரும் திவாரிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். [இ]

யாழ். வாலிபரின் சடலம் கனடாவில் 3 மாதங்களின் பின் கண்டுபிடிப்பு!

தலையில் சூட்டுக் காயம் இருந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 22

கனடா, ஸ்காபரோ பகுதியில் வசித்து, காணாமற் போனதாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணத் தமிழர் ஒருவருடைய சடலம் சுமார் மூன்று மாதங்களின் பின்னர் மீட்கப்பட்டது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி காணாமற் போன இவரின் சடலம் சிதைவுற்ற நிலையில் இவ்வருடம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

ஸ்காபரோ, பிரைமோட்டன் பிரைவில் வசித்து வந்த 41 வயதான பொன்னையா பாலச்சந்திரன், நிர்மாணத் தளம் ஒன்றிலிருந்து சம்பவ தினம் இரவு 8 மணிக்குத் தமது காரில் சென்றவர் பின்னர் திரும்பி வரவே இல்லை.

நான்கு நாட்களுக்குப் பின்னர் அவரது கார் பெருஞ்சாலை ஒன்றில் பொலீஸாரால் கண்டு பிடிக்கப்பட்டது.

மூன்று மாதங்களின் பின்னர் வெகு [illegible] உள்ள கெல்ட் [illegible] புஸ்விளிக் பகுதியில், சடலம் தற்செயலாக ஒருவரின் காலில் தட்டுப்பட்டதால் கண்டுபிடிக்கப்பட்டது.

சவப் பரிசோதனையின் போது பாலச்சந்திரனின் சடலத்தில் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைச் சேர்ந்த பாலச்சந்திரன் ஸ்காபரோ நிறுவனம் ஒன்றில் பாதுகாப்பு ஊழியராகப் பணிபுரிந்து வந்தார்.

இவரது சடலம் மூன்று மாதங்களின் பின்னர் கண்டு [illegible] கனேடியப் பத்திரிகைகள் [illegible] செய்திகளை வெளியிட்டிருந்தன.

புலிகளின் குரல் வானொலியில்

22 — 03 — 1995

புதன் இரவு

★ 8-02 — குயிலோசை — நிகழ்ச்சியில் ர. பகீரதி எழுதிய ''தாய்மனசு'' கிராமிய நிகழ்வு

★ 8-20 — வாத்தியகானங்கள்

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — நாடகம்— மலரன்னை எழுதிய ''பயம்'' என்பன இடம் பெறும்.

23 — 03 — 1995

வியாழன் காலை

★ 7-02 —மாவீரவணக்கம்

★ 7-15 —விடுதலைகீதங்கள்

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7 40 — விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

தமிழீழ வானொலி ஒலிபரப்பு

புதன் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்

★ 5-02 — எழுச்சிக்கீதம்

★ 5-10 — புதியவை

★ 5-15 — படப்பாடல்கள்

★ 5-30 — அறிவூற்று

★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்

★ 6-02 — உங்கள் தெரிவு

★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்

★ 6 20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி

★ 6-30 — மணிக்குமாலை நிகழ்ச்சி யாவும் நிறைவுபெறும்.

மகளிர் குழு கண்காட்சி

யாழ்ப்பாண பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர் குழுவின் கண்காட்சி அண்மையில் கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கும் வைபவத்துக்கு மகளிர் குழுத் தலைவி திருமதி கணேஸ்வரி சேவியர் தலைமை வகித்தார்.

யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சிறில் வைபத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (இ)

றோட்டறி அஞ்சலோட்ட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். றோட்டறிக்கழகத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி மாபெரும் அஞ்சலோட்ட நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

ஏப்ரல் 8ஆம் 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுகள் பாடசாலை மாணவர்களுக்கும் கழகவீரர்கள், வீராங்கனைகளுக்கும் உரியவை. [இ-14]

கௌரவிப்பு

சுழிபுரம், மார்ச் 22

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயில் வருடாந்த மகோற்சவத்தின் போது தொடர்ந்து பத்துத் தினங்கள் கந்தபுராண விரிவுரையாற்றிய தமிழருவி. த. சிவகுமாரனுக்கு பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்பட்டது. (இ-28

கொழும்பில் பொதிகளை இழந்த யாழ். பெண்கள்!

ஓட்டோ சாரதி மோசடி

கொழும்பு, மார்ச் 22

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற இரு பெண்கள் தமது பிரயாணப் பொதிகளை ஓட்டோ சாரதியிடம் பறிகொடுத்தனர்.

சம்பவம் பற்றி கூறப்படுவதாவது;

ரயிலில் கொழும்பு கோட்டைக்கு சென்ற இவ்விரு பெண்களும் வெள்ளவத்தை செல்வதற்காக ஓட்டோ ஒன்றை ஒழுங்கு செய்தனர்.

சரளமாக தமிழில் உரையாடிய மேற்படி ஓட்டோ சாரதி குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைவதற்கு முன்னரே பாதி வழியில் ஓட்டோவை நிறுத்தி இதற்கு மேல் தன்னால் செல்லமுடியாது என்று கூறினார்,

பெண்கள் இருவரும் ஓட்டோவை விட்டு இறங்கி சாரதியுடன் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்த வேளையில்— சாரதி எதிர்பாராத விதமாக ஓட்டோவைக் கிளப்பிச் சென்று மறைந்து விட்டார்.

பொதிகளை அபகரிப்பதற்காகவே அந்தச் சாரதி இப்படி ஒரு தகராறை உருவாக்கினார் என்பது பின்னரே இவர்களுக்குப் புரிந்ததாம்.

இப் பெண்களில் ஒருவர் வடக்கிலுள்ள திணைக்கள உயரதிகாரி ஒருவரின் மனைவி என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

[இ-14]

11வயதுச் சிறுமியை வேலைக்கு வைத்திருந்தார்

ஹேமா மீது குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச், 22

பதினொரு வயதுச் சிறுமியை வீட்டுப் பணிப்பெண் வேலைக்கு அமர்த்தியதாக ஹேமா பிரேமதாஸா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகளாக அச் சிறுமியை வேலைக்கு வைத்திருந்ததாகவும்—

ஒரு சதம்கூட அச் சிறுமிக்கு வழங்கப்படவில்லை என்றும்— மனித உரிமைகள் அபிவிருத்தி சட்டத்தரணிகள் அமைப்பு தொழில் ஆணையாளருக்கு முறையிட்டுள்ளது.

இக் குற்றச்சாட்டு தொடர்பாக தம் முன்னிலையில் தெரிபடும் படி ஹேமா பிரேமதாஸாவுக்கு தொழில் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார்.

அலரி மாளிகையிலும் பின்னர் விஜேராம மாவத்தையில் உள்ள வாசஸ்தலத்திலும் அச் சிறுமி வேலைக்கமர்த்தப்பட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-எ)

குவைத்தில்

160 பணிப் பெண்கள் தூதரகத்தில் தஞ்சம்

கொழும்பு, மார்ச் 22

குவைத்தில் பணிபுரியும் சுமார்160 இலங்கை பணிப் பெண்கள் தொல்லை தாங்காது — தாம் வேலை செய்யும் இடங்களிருந்து தப்பி வந்து அங்குள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

சம்பள கொடுப்பனவுகளில் ஒழுங்கீனம்—

நீண்ட நேர வேலை—

பாலியல் துன்புறுத்தல்கள் போன்ற முறைப்பாடுகளுடன் தினமும் 10 பெண்களாவது இவ்வாறு தூதரகத்துக்கு வருவதாகவும்— நிலைமை மேலும் மோசமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை — வளைகுடா நாடுகளில் இலங்கைப் பணிப் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் இடையூறுகள் குறித்து விசாரணை செய்வதற்கென தொழில் தொழிற் பயிற்சி அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ, மற்றும் வேறு இரு பிரதி அமைச்சர்கள் — வளைகுடாவுக்கான 10 நாள் சுற்றுப் பயணம் ஒன்றை நாளை வியாழக்கிழமை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-14)

சித்தன்கேணி இசைவிழா இறுதி நாள் நாளை

வலிகாமம்,மேற்கு மார்ச் 22

வலி—மேற்கு பிரதேச கலாசார பேரவை சித்தன்கேணியில் நடத்தும் இசை விழாவின் இறுதி நாளான நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு மங்கல இசை இடம் பெறும்

தொடர்ந்து 6மணிக்கு திரு ஏ. ஜெயராமனின் வயலின் இசை, 6-30 மணிக்கு போராளிக் கலைஞர்கள் வழங்கும் பாட்டு. இரவு 8 மணிக்கு இன்னிசைவேந்தன் பொன். சுந்தரலிங்கம் — பாட்டு 9-40 மணிக்கு வி. கே. கானமூர்த்தியின் வேணுகான இசை, 10-40 இற்கு தீவக கோட்டக் கலை பண்பாட்டுக் கழக மகளிர் அமைப்பு — கவின் கலைக் கல்லூரி மாணவர்களின் 'சோதியா அணையாத ஜோதி''—நாட்டிய நாடகம் இரவு 11-25 இற்கு விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தின் சதியை வென்ற சாவுகள் நாடகம் என்பன இடம் பெறும்.

தமிழீழ கலை பண்பாட்டுக் கழக ஆதரவுடன் நடைபெறும் நாளைய நிகழ்வுகளிற்கு திரைப்படப் பிரிவு பொறுப்பாளர் திரு ந. பகலவன் தலைமை தாங்குவார்.

தமிழீழ கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

(161-14-175)

புலிகளின் நல்லெண்ண நடவடிக்கைக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 22

யுத்தக்கைதிகளை விடுதலை செய்தது மூலம் விடுதலைப் புலிகள் தமது நல்லெண்ணச் சமிக்ஞையை வெளிக்காட்டி உள்ளனர். விடுதலைப் புலிகளின் முடிவு குறித்து யாழ். மறைமாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு பாராட்டுக்களுடன் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

யுத்தக் கைதிகள் விடுதலை குறித்து விடுத்த அறிக்கையில், யாழ். மறைமாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுத் தலைவர் சி. ஜீ.ஜெயக்குமார் அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடினமான பணிகளை மேற்கொள்ளும் போது ஏற்படும் தடைகளை வெல்ல செயல் வடிவங்களே தேவை இலங்கை அரசும் மக்களும் இதனை சமாதான முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகக் கருத வேண்டும்.

விடுதலை செய்யப்பட்டவர்களும் வடபகுதி மக்களின் நல்லெண்ணத்தையும் மனிதாபிமான பண்பையும், உண்மை நிலையையும் தென்பகுதி சகோதரர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். உண்மைக்குச் சாட்சி பகர்ந்து சமாதானச் செய்திகளை வெளிப்படுத்த வேண்டும்.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

தனி சிங்களத்தில் மரக்கறி விதை பைக்கெட்!

கமநல சேவைப் பகுதி விவசாயப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுவரும் மரக்கறி விதைகள் அடைக்கப்பட்டுள்ள பைக்கெட்டுக்கள் தனிச் சிங்களத்தில் காணப்படுகின்றன.

விதைகளின் பயன்பாட்டுக்குரிய காலம் போன்ற ஏனைய விவரங்களை அறியமுடியாமல் இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

[இ-14-11]

மரண அறிவித்தல்கள்

திருமதி சுப்பையா தவபாக்கியம்

1995 - 03 - 19 ஆம் திகதி உதயனில் பிரசுரிக்கப்பட்ட சுப்பையா தவபாக்கியம் அவர்களின் மரண அறிவித்தல் பிரகாரம் அன்னாரின் இறுதிக் கிரியைகள் சங்கானை தொட்டிலடியில் உள்ள அவரது மகள் இல்லத்தில் இன்று புதன்கிழமை (22 - 03 - 1995) காலை 8-00 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அவரது பிறப்பிடமான மூளாய் தெற்கு, ஐயனார் கோயில் வீதியில் உள்ள பித்தனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, 10-00 மணியளவில் அங்கு சிவாக்கினியுடன் சங்கமிக்கப்படும்.

உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவரையும் இத் தகவலை ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் வேண்டுகின்றேன்.

தகவல்:
க. சண்முகசிவானந்தன்
[மகன்]

மூளாய் தெற்கு,
மூளாய்.
[35827]

திருமதி அன்னம்மா வல்லிபுரம்

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அன்னம்மா வல்லிபுரம் நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சி. வல்லிபுரம் (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும், பூதத்தம்பி காலஞ்சென்றவர்களான அருணாசலம், சின்னப்பிள்ளை, சிதம்பரம், வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் செல்வராணி (மலேசியா), ஞானமணி, இராசமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், நா. நடேசன், ச. கணேசலிங்கம் (மலேசியா), பொ. விக்னேஸ்வரலிங்கம், நா. சிவலோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஈஸ்வரன், குகன் (மலேசியா), கேதீஸ்வரன், பிரதீஸ்வரன், சந்தியா, திவ்யா, லிங்கேஸ்வரன், ஜனகன், லோகீசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (22 - 03 - 95) பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. விக்கினேஸ்வரலிங்கம்
(மருமகன்)

கோப்பாய் வடக்கு
கோப்பாய்.
(35841)

பொன்னம்பலர் இராசரத்தினம்

(சாஸ்திரியார் – செல்வராசா)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் இராசரத்தினம் [சாஸ்திரியார் -செல்வராசா] நேற்று இரவு சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப்புதல்வரும், இராசையா, குணரத்தினம், சிவரத்தினம், தங்கம்மா, அன்னம்மா, இரத்தினம், ஞானரத்தினம், ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசமணி, காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சுப்பிரமணியம் மற்றும் கந்தசாமி, சரஸ்வதி, இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

சிவம் (பொறியியலாளர் - ரெலிகொம், மன்னார்), அன்னலிங்கம் [ஓய்வுபெற்ற தாபலதிபர்], வேதநாயகி, அருளானந்தம் [மின்- பொறியியலாளர், துருக்கி], பரமேஸ்வரி, கமலேஸ்வரன் [U K], சர்வாம்பிகாதேவி (கனடா), சிவனேஸ்வரன் [சவூதி], நிர்மலாதேவி [சுவிஸ்], லலிதாதேவி, கலாநிதி (ஆசிரியை - கொக்குவில் இந்துக்கல்லூரி], ஜெயக்குமார் [சென்- அந்தனீஸ், கொழும்பு], சாந்தகுமார் (U. K) சிவநிதி, கருணசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மங்கையர்க்கரசி, சங்கரசிவம் [பிரான்ஸ்], சிவதாஸ் மனோன்மணி [ஜேர்மனி], கணேசலிங்கம் [சவூதி], விக்கினேஸ்வரி, கோணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (22-3-95) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் மேற்கு ஞானபண்டிதர் வித்தியாசாலை வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. அன்னலிங்கம்
(ஓய்வுபெற்ற தபாலதிபர் —
மருமகன்]

தி. சுதந்திரபாலன்
(கணக்காளர், செயலகம்,
யாழ்ப்பாணம் —
[பெறமகன்]

[35842]

வில்லியம்ஸ் இராசரட்ணம் ஸ்ரீபன

வில்லியம்ஸ் இராசரட்ணம் ஸ்ரீபன் நேற்று கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்து விட்டார்

அன்னார் காலஞ் சென்றவர்களான K. S. ஸ்ரீபன் திருமதி முத்தம்மா ஸ்ரீபன் ஆகியோரின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்ற S. விஜயரட்ணம், மற்றும் C. S. [illegible]ணரட்ணம், V. S. ஸ்ரீபன், திருமதி R. S. தனபாலசிங்கம் காலஞ்சென்ற திருமதி J. சிங்கரட்ணம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22- 3- 95) புதன்கிழமை காலை 7. 00 மணியிலிருந்து பகல் 12. 00 மணி வரை பிரதான வீதியில் உள்ள White House இலும், 12. 00 மணியிலிருந்து பிற்பகல் 2. 15 மணிவரை யாழ்ப்பாண Y. M. C A மண்டபத்திலும், இறுதி மரியாதைக்காக வைக்கப்பட்டு, நல்லடக்க ஆராதனையின் பின் பூதவுடல் பிற்பகல் 3. 15 மணியளவில் நல்லூர் பரி யாக்கோபு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செயலாளர்
Y. M. C. A

யாழ்ப்பாணம்.
[35840]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22 - 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

நாளை மறுதினம் கிளாலியூடாக

அகதிகள் 247 பேரும் யாழ். வருகின்றனர்

யாழ்ப்பாணம், மார்ச். 22

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று கடந்த ஓகஸ்ட் மாதத்தில் தாயகம் திரும்பிவந்து- வவுனியா அகதிமுகாமில் தங்கியிருந்த— யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த 78 குடும்பங்களைச் சேர்ந்த 247 பேர் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்கள்

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஏற்பாட்டில் நாளை வவுனியாவில் இருந்து புறப்படவிருக்கும் இவர்கள் கிளாலியூடாக யாழ்ப்பாணம் வந்து சேர்வர்.

குருநகர், பருத்தித்துறை அச்சுவேலி, கொக்குவில், உடுப்பிட்டி, மானிப்பாய், தெல்லிப்பழை, சங்கானை, திருநெல்வேலி, சாவகச்சேரி தாளையடி, ஆகிய பகுதிகளைச்சேர்ந்தவர்களே நாளை புறப்படும் குழுவில் அடங்குகிறார்கள்.

இவர்களை அகதிகளுக்கான ஐ.நா. தூதரக கொழும்பு அதிகாரி கொட்பிட் கொபினர், வவுனியா அலுவலக திட்டமிடல் அதிகாரி டேவிட் அற்றின், மடு அலுவலக அதிகாரி பேபியோ வரலி ஆகியோர் அழைத்து வருகின்றனர். (ஓ-3)

டானியல் நினைவு நாள் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றம் நடத்தும் எழுத்தாளர் கே. டானியல் நினைவு நாள் விழா நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

மன்றத் தலைவர் பா. மகாலிங்கசிவம் தலைமையில் மாலை 4 மணிக்கு நடைபெறும் இவ்விழாவில் விரிவுரையாளர் த. கலாமணி நினைவுரை நிகழ்த்துவார்.

விரிவுரையாளர் திரு. சி. சிவலிங்கராஜா, பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் முறையே பெரும் பொருளார் உரை, அறிமுக உரை, நிறைவுரை என்பன நிகழ்த்துவர். (அ)

கல்வி டிப்ளோமா பயிற்சி; ஏப். 5க்கு முன் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச்.22

தேசிய கல்வி நிறுவகம் நடத்தும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு 1995 – 1996 ஆம் ஆண்டுக்கான மாணவர்களை தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களாகக் கடமையாற்றும் பட்டதாரிகளும், நுண்கலையில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களும் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் —

மேற்படி தகைமைகளைக் கொண்ட யாழ் கல்வி வலயம் இரண்டைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன் சிரேஷ்ட விரிவுரையாளர், பட்டப்பின் கல்விடிப்ளோமா, தேசியகல்வி நிறுவகம், யாழ் நிலையம், யா/ கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி கோப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

விண்ணப்பப் படிவங்கள் அதிபரால் உறுதி செய்யப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாதிரி விண்ணப்படிவத்தை கோப்பாயில் உள்ள கல்வி வலயம் இரண்டின் அலுவலகத்தில் பார்வையிடலாம். [ஓ]

கேரளாவின் முதலமைச்சர் ஏ. கே. அன்ரனி

புதுடில்லி, மார்ச். 22

இந்திய பிரதமர் பி.வி. நரசிம்மராவின் நெருங்கிய நண்பரான ஏ கே. அன்ரனி கேரள மாநிலத்தின் முதலமைச்சராகத் தெரிவுசெய்யபட்டுள்ளார்.

இதுவரை முதலமைச்சராக இருந்த கருணாகரன் பதவி விலகியதை அடுத்து முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர் இன்று பதவி ஏற்பார்.

சர்க்கரை ஊழல் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையையடுத்து கடந்த செப்டம்பரில் மத்திய அமைச்சரவையில் இருந்து ஏ கே. அன்ரனி பதவி விலகியிருந்தது தெரிந்ததே (ஓ-3)

மாங்குளத்தில் இலங்கை வங்கி

கொழும்பு மார்ச் 22

இலங்கை வங்கியின் மாங்குளம் கிளையை மீண்டும் மாங்குளத்திலேயே இயங்க செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான கட்டடம் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஏப்பிரல் புத்தாண்டு முதல் இக் கிளை தனது நடவடிக்கைகளை மாங்குளத்தில் மேற் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் வங்கி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார் என கொழும்பு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. [இ-14]

சகல...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வித்து வருகிறார்கள்.

இவை செயல்வடிவம் பெற வேண்டுமானால் அரசாங்கம் மொழிச்சட்டத்துடன் ஆரம்பித்து நாட்டில் சகல துறைகளிலும் அதிகாரப்பரவலாக்கல் கொள்கையை விசுவாசமாக அமுல் செய்யவேண்டும்.

பாடசாலை மட்டத்தில்

இந்த முக்கியமான நடைமுறை பாடசாலை மட்டத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

21 ஆம் நூற்றாண்டின் தேவைகளைச் சமாளிக்க நாட்டை முன்எடுத்து செல்வதற்கு பாடசாலை பாடவிதானத்தில் இன ஐக்கியத்தை ஒரு பாடமாக சேர்க்கும் வகையில் மாற்றங்களை செய்ய அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து மொழிப்பிரச்சினையே முக்கிய பிரச்சினையாக இருந்து வருகிறது.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக 1957 இல் சிங்கள மொழிச் சட்டத்துடன் தமிழ் மொழி நியாயமான உபயோகம் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது.

எனினும் இந்தச் சட்டம் அன்றில் இருந்து உரிய முறையில் அமுல் செய்யப்படவில்லை. அரச மொழி ஆணைக்குழு, அரச மொழித் திணைக்களம், மற்றும் பல்வேறு நிறுவனங்கள் இந்தக் கொள்கைகளை அமுல் செய்யவில்லை.

புத்தகங்களை எழுதுவதிலும், கருத்தரங்குகள், கூட்டங்கள் நடத்துவதிலுமே அவை கவனம் செலுத்தின.

சட்டத்தை அமுல் செய்வதில் இடம்பெற்ற ஒழுங்கீனங்களே பல்வேறு சமூகங்களும் தங்கள் தனிப்பட்ட அடையாளத்தை நிலைநாட்ட அனுமதிக்கவில்லை-என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் பேசுகையில்—

நாட்டின் எந்தப்பகுதியிலும் ஒவ்வொரு பிரஜையும் தமது அலுவல்களை தான் விரும்பிய மொழியில் மேற்கொள்ள சந்தர்ப்பம் இல்லாவிட்டால் பல்வேறு சமூகத்தினர் மத்தியில் ஐக்கியத்துக்கு இடம் இராது — என்று கூறினார். [அ-3]

பேச்சுவார்த்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும், பொறுமையுடன் முயற்சி செய்து தடங்கல்களைத் தாண்டி சமாதான முயற்சியை முன்னெடுக்க வேண்டும்.

அந்த அணுகுமுறையையே அரசு கைக்கொள்ளும். பேச்சுவார்த்தையை நிச்சயமாகத் தொடரும் — என்று கூறினார். (அ)

யாழ். நிலை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

யுடன் நடத்திய பேச்சின் விவரத்தை வெளியிட மறுத்த அமைச்சர் பீரிஸ் —

"நாம் என்ன தீர்மானத்தை மேற்கொண்டிருக்கிறோம் என்பதை ஓரிரு தினங்களில் தெரிவிப்போம்'' — என்றார்.

திரு பிரபாகரனின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் சில விடயங்கள் தொடர்பாக சில பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. இவற்றை ஆராய்ந்து தீர்த்து வைக்க வேண்டியுள்ளது'' — என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-3)

மக்களின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொலைவிற்கு போய்விடும் என்று நான் எண்ணுகின்றேன்.

யுத்தம் நடத்தி சுதந்திர நாடு ஒன்றை அமைப்பதைத் தவிர எமக்கு வேறுவழி ஏதும் இருக்காது. அரசாங்கத்துக்கு நாம் வழங்கியுள்ள [illegible] சந்தர்ப்பம் இதுவாகும்

இப்படி அன்[illegible]கம் தெரிவித்தார். (இ-எ]

யாழ். வர...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உள்ளூராட்சி, சுதேச வைத்தியத்துறை அமைச்சரான அமரசிறி தொடங்கொட ஆகியோரே அந்தஇரு அமைச்சர்களும் ஆவர்.

''வடக்குக்குச் சென்று வருமாறு ஜனாதிபதி சந்திரிகா என்னைக் கேட்டிருக்கிறார். அங்கு செல்வதற்காக விடுதலைப் புலிகளின் பதிலுக்காக காத்திருக்கிறேன்''— என்று அமைச்சர் விக்கிரமநாயக்கா தெரிவித்தார்.

வடபகுதிக்கு' செல்ல விடுதலைப் புலிகளுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன் தென்பகுதி மக்களின் உணர்வுகளை அவர்களுக்கும், வடபகுதி மக்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று அவா கொண்டுள்ளேன்.

''விடுதலைப் புலிகளிடம் இருந்து இன்னமும் பதில் வரவில்லை''—என்று அமைச்சர் தொடங்கொட கூறினார். (ஓ-3)

கைதிகளாக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நியமித்தோம். இருதரப்பு பிரதிநிதிகளும் பேச்சு நடத்தினோம்.

ஆனால் அரசு இப்போது பின்வாங்கிவிட்டது; ஒன்றும் செய்யாமல் வெறும் பிரசாரம் தான் செய்கிறது.

அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகளே பேச்சுக்கள் முறிவடையக் கூடியதற்கான சூழ்நிலை ஏற்பட்ட தற்குக் காரணம் அகும். — என்றார். (உ-3)

தகவல் தரவும்

இவர் சில மோசடிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். இவர் பற்றிய தகவல்கள் கிடைத்ததை அடுத்து விசாரணைக்காக வைத்திருக்கும்போது தப்பி ஓடிவிட்டார். இவர் [illegible] அண்மையிலுள்ள விடுதலைப் புலிகள் முகாம்களுக்கோ அல்லது காவல்துறையினருக்கோ அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மனிதாபிமானமிக்க தலைவர் பிரபா

விடுதலையான பொலிஸார் பேட்டி

''தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒரு கொலையாளி என்ற கண்ணோட்டத்திலேயே இதுவரை சிங்கள மக்கள் பார்த்தனர். ஆனால் அவர் மனிதாபிமானம் மிக்கத் தலைவர் என்பது இப்போது தெளிவாகியுள்ளது.''

இவ்வாறு தலைவர் பிரபாகரனினால் மனிதாபிமான அடிப்படையில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பொலிஸ்காரர்களில் ஒருவரான எம்.எச்.பியரட்னா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''எங்கள் அரசு நாம் மேற்கொண்ட உண்ணாவிரதத்தையிட்டு அவ்வளவு அக்கறை காட்டவில்லை.

ஆனால் பிரபாகரன் ஒவ்வொரு நிமிடமும் எமது நிலைமை பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்.

சாகும் நிலையில் இருந்த எங்களை அவர் சாக விடவில்லை; எவ்வித கோரிக்கைகளும் இன்றி எங்களை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பித்தார்.

எமது விடுதலையின் மூலம் பிரபாகரனின் மனித உள்ளத்தை சிங்கள மக்கள் இன்று நன்கு உணர முடிகிறது.'' இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-5)

சித்திரை புது வருடத்தை முன்னிட்டு

இலங்கை வங்கியின் கிளைகளுக்கு புதிய நோட்டு

யாழ்ப்பாணம். மார்ச் 22

80 லட்சம் ரூபா பெறுமதியான புதிய நாணயங்களும் நோட்டுக்களும் இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த ''சோமாரி'' கப்பலில் இலங்கை வங்கி உத்தியோகத்தர்களால் இப் புதிய நாணயங்களும் நோட்டுக்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளின் வாடிக்கையாளர்களுக்கு இப் புதிய நாணயங்களும் நோட்டுக்களும் சித்திரைப் புத்தாண்டுக் கைவிசேடத் தேவைகளுக்காக வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வின் பிரதம மதிப்பீட்டாளர்களுக்கான கூட்டம் முன்னர் அறிவித்தபடி இன்று பிற்பகல் 2மணிக்கு தமிழீழ கல்விக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கிறது.

ஒவ்வொரு கல்விக் கோட்டங்களில் இருந்தும் குறைந்தது ஒரு பிரதிநிதியை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-3)

வில்லிசைப் புலவர் சின்னமணியின் வேண்டுகோள்

23 — 03 — 95 வியாழக்கிழமை அன்று எமது வில்லிசையை ஏற்பாடு செய்த ஆலய உபயகாரர்கள் என்னை உடனடியாக நேரில் வந்து சந்திக்கும்படி பணிவுடன் வேண்டுகின்றேன்.

நன்றி.

சின்னமணி,
கலைவாணர் வில்லிசைக் குழு.

'கலை அகம்',
அச்சுவேலி.
[35829]

''மகரயாழ்'' விருது பெற்ற டாக்டருக்கு வாழ்த்து!



டாக்டர் து. வி. ஜெயகுலராஜா

விளையாட்டு வீரனுக்கு
விளையாட்டுத்துறை நிர்வாகிக்கு
விருது கிடைத்தது.
வியந்து பாராட்டுகிறோம்.

வடமராட்சி
உதைபந்தாட்டச் சங்கம்

(சி/826)

அகில இலங்கை கம்பன் கழகத்தின்
1995 ஆம் ஆண்டிற்கான

மகர யாழ் விருது பெறுகின்ற

வைத்திய கலாநிதி

ஜெயகுலராசா

அவர்களை

ஜெயா எம் குல விளக்காய் ராசாவென
நீ நீடூழி வாழ்கவென
வாழ்த்துகிறோம்

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர்
சங்க உறுப்பினர்கள்

61, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்
[33836]